# ஸூரத்துன் நிஸா விளக்கம்

நிஸா பெண்கள் என்ற கருத்தில் வரும் சூரா, பெண்கள் பற்றிய சட்டங்கள் அதிகம் சொல்லப்படுவதனால் அப்படி பெயர் வைக்கப்பட்டுள்ளது,

நூற்று எழுபத்தாறு வசனங்களைக் கொண்ட இந்த சூரா மதீனாவில் இறங்கிய மதனீ சூராவாகும்.

## (முதலாவது வசனம் முதல் பதின் நான்காவது வசனம் வரை கடைசி வசனம் உற்பட)

இந்த பகுதியில் மனித இனத்தின் துவக்கமும் அதன் பெருக்கமும் , அனாதைகள், அவர்களின் சொத்துக்குரிய கடமைகள் , திருமணத்தின் சில ஒழுங்குகள், ஆண்கள் பெண்களுக்கான சொத்துரிமை , குறிப்பாக மரணித்தவர் விட்டுச் செல்லும் அனந்தர சொத்தின் சட்டம் பற்றி பேசப்படுகின்றது

يَـاَيُّهَا النَّاسُ اتَّقُوْا رَبَّكُمُ الَّذِىْ خَلَقَكُمْ مِّنْ نَّفْسٍ وَّاحِدَةٍ وَّخَلَقَ مِنْهَا زَوْجَهَا وَبَثَّ مِنْهُمَا رِجَالًا كَثِيْرًا وَّنِسَآءً ‌ۚ وَاتَّقُوا اللّٰهَ الَّذِىْ تَسَآءَلُوْنَ بِهٖ وَالْاَرْحَامَ‌ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلَيْكُمْ رَقِيْبًا

மனிதர்களே! உங்கள் இறைவனுக்குப் பயந்து நடந்து கொள்ளுங்கள், அவன் உங்கள் யாவரையும் ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான், அவரிலிருந்தே அவர் மனைவியையும் படைத்தான்; பின்னர் இவ்விருவரிலிருந்து, அநேக ஆண்களையும் பெண்களையும் (வெளிப்படுத்தி உலகில்) பரவச் செய்தான்; ஆகவே, அல்லாஹ்வுக்கே பயந்து கொள்ளுங்கள்; அவனைக்கொண்டே நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்கள்; மேலும் (உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்களையும் (ஆதரியுங்கள்) - நிச்சயமாக அல்லாஹ் உங்கள் மீது கண்காணிப்பவனாகவே இருக்கின்றான். (4:1)

## முதலாவது வசனம் தரும் படிப்பினைகள்;

((யா அய்யுஹன்னாஸ்; மனிதர்களே!)) இந்த வசன ஆரம்பம் மனித சமூகத்தை விழிக்கின்றது என்றால், இது முஸ்லிம் காபிர் என்பதைத் தாண்டி முழு மனித சமூகத்தையும் விளிக்கின்றது. பொதுவாக அல்லாஹ் குர்ஆனில் மனிதர்களே என்று அழைத்தால் 'அவன்தான் படைப்பாளன் இறைவன்' என்பதை நிரூபிக்கும் ஒரு செய்தியையே மனிதன் சிந்திக்கும் பொருட்டு பின்னால் எடுத்துரைப்பான். மனிதர்கள் சிந்தித்தால் சீர்பெறுவார்கள். இங்கு அல்லாஹ் பின்னால் சொல்வது;;

(இத்தகூ ரப்பகும்; உங்கள் இறைவனை பயந்துகொள்ளுங்கள்!))

இங்கு அல்லாஹ் சொல்லவரும் விடயத்தை சொல்ல முன்னர் இறட்சித்துக் காப்பவன் அல்லாஹ்வை பயந்து கொள்ளுமாறு சொல்கின்றான், ஏனென்றால் அல்லாஹ்வுக்கு நாம் பயப்பட வேண்டும் என்றால் , முதலில் அவன் தான் எங்களை படைத்தான் என்று ஏற்றுக்கொள்ளவேண்டும் , அதனையே அல்லாஹ் தொடர்ந்து சொல்கின்றான்;

((அல்லதீ கலககும் ; அவனே உங்களை படைத்தான்))

இந்த வசனம் மூலம் அல்லாஹ் அவன்தான் மனிதனைப் படைத்தான் என்ற அவனது ஆற்றலை எடுத்துரைப்பதுடன், மனித சமூகம் இந்த உலகத்திற்கு தானாக வந்ததல்ல, மாறாக இறை ஆற்றலால் வந்தது என்ற நாத்திகத்திற்கு எதிரான இஸ்லாமிய கொள்கைக் கோற்பாட்டை புகட்டுகின்றான்.

படைப்பாளன் என்ற அடைமொழியே அவனை மனிதன் பயந்து நடப்பதுடன், அவனுக்கே வணக்கம் புரியவும் மனிதனை தூண்டுகின்றது. ஒரு உண்மை என்னவெனில் " நாத்திகர்கள் என்ற ஒரு சிறிய கூட்டத்தைத் தவிர்த்து, பெரும்பான்மை உலக மக்கள் 'இந்த உலகம், மனிதர்கள் தானாக வந்ததல்ல, ஒரு படைப்பாளன் இருக்கிறான்' என்ற உண்மையை ஏற்று இருக்கின்றார்கள். என்பதே. அதனால்தான் ஹிந்துக்கள் "ஒன்றே குலம் ஒருவனே தேவன்" என்று சொல்வார்கள்'

அடுத்து, (மின்னனப்ஸின் வாஹிதா; ஒரே ஆத்மாவிலிருந்து படைத்தான்)) மனித சமூகம் மண்ணால் படைக்கப்பட்டது என்றால்; மனித சமூகத்தின் தந்தை, முதல் மனிதர் ஆதம் (அலை) அவர்களையே அல்லாஹ் முதலில், மண்ணைக் கொண்டு தன் கையால் நேரடியாக படைத்தான், அதுவே மனித படைப்பு பற்றி அல்குர்ஆன் கூறும் கோட்பாடு, அவரிலிருந்தே ஏனையவர்களை அல்லாஹ் படைத்தான். அதன் தொடர் பின்னல் வரும்;

ஆதம் (அலை) என்ற முதல் மனிதர் பற்றி அல்குர்ஆன்;

“இப்லீஸே! நான் என்னுடைய கைகளால் படைத்தவருக்கு ஸுஜூது செய்வதை விட்டும் உன்னைத் தடுத்தது எது? பெருமையடிக்கிறாயா? அல்லது நீ உயர்ந்தவர்களில் ( ஒருவனாக) ஆகிவிட்டாயா?” என்று ( அல்லாஹ்) கேட்டான்.38:76. “நானே அவரைவிட மேலானவன்; (ஏனெனில்) என்னை நீ நெருப்பிலிருந்து படைத்தாய்; ஆனால் அவரையோ நீ களிமண்ணிலிருந்து படைத்தாய்” என்று (இப்லீஸ்) கூறினான். (38:75,76)

அல்லாஹ்விடத்தில் நிச்சயமாக ஈஸாவின் உதாரணம் ஆதமின் உதாரணம் போன்றதே; அவன் அவரை மண்ணிலிருந்து படைத்துப் பின் “குன்” (ஆகுக) எனக் கூறினான்; அவர் (மனிதர்) ஆகிவிட்டார். (3:59)

((வகலக மின்ஹா ஸவ்ஜஹா ; அதிலிருந்து அதற்கான ஜோடியை அவன் படைத்தான்.))

அந்த ஒரே ஆத்மாவான ஆதம் (அலை) அவர்களிலிருந்தே அவருக்கான மனைவியை அல்லாஹ் படைக்கிறான், அதுதான் ஹவ்வா என்ற முதல் பெண்மணி. இவர்களை அல்லாஹ் நேரடியாக மண்ணால் படைக்கவில்லை மாறாக ஆதம் நபியின் விலா பகுதியிலிருந்தே படைத்தான்,

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: ...... பெண் விலா எலும்பிலிருந்து படைக்கப்பட்டிருக்கிறாள். மேலும், விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதி மிகக் கோணலானதாகும். ..... (புஹாரி:3331,5185, முஸ்லிம்)

இந்த வசனம் மூலம் பெண் இனத்திற்கு அல்லாஹ் செய்த அருளை புரிந்து கொள்ளலாம், பெண்ணுக்கு உள்ள கண்ணியமே அவள் ஆண் என்ற இனத்தின் ஒரு பகுதி என்பதுதான், அவளை வேறுபடுத்திப் பார்க்க முடியாது. பெண்களுக்கு சமஉரிமை கோரி, அதைவைத்து இஸ்லாத்தை விமர்சிக்கும் இந்த உலகம் 'பெண்கள் படைப்பிலேயே ஆணைகளுக்கு நிகரானவர்கள்' என்ற தத்துவத்தை இஸ்லாமே உலகிற்கு முதன் முதலில் சொல்லித் தந்தது என்ற உண்மையை புரிய வேண்டும்.

அதே நேரம் பெண்களிடம் உடல் ரீதியான பலவீனம் இருக்கிறது என்பதையும் மறந்துவிடாமல் புரிய வேண்டும் என்பதற்காக இஸ்லாம் அதனையும் தொட்டுக் காட்டுகின்றது. அதனையே நபியவர்கள்; ' விலா எலும்பிலேயே அதன் மேற்பகுதி மிகக் கோணலானதாகும்' என்ற வார்த்தை மூலம் எடுத்துக் காட்டினார்கள். அது மாதாந்த மாதவிடாயாக இருக்கலாம், அல்லது அவர்களுடன் ஒட்டியிருக்கும் 'கட்பு' என்ற சொத்தாக இருக்கலாம், இது ஒவ்வொன்றுக்கும் இஸ்லாம் பாதுகாப்பிற்கான வழிகாட்டல்களை வைத்திருக்கிறது. பெண்கள் விடயத்தில் இதனை சரியாக புரிந்த மனிதனாலேயே அவர்களுக்கான சரியான பாதுகாப்பையும், உரிமையையும் கொடுக்கலாம், அவளை அடக்குமுறைக்கு உற்படுத்தாமலும், ஆபாசப் பொருளாக பயன்படுத்தாமலும் சரியாக அந்த பெண்ணினத்தைக் கண்ணியப்படுத்தலாம், இல்லையென்றால் இன்று உலகில் இருப்பது போன்று வெறும் உரிமைக் கோசம் மட்டுமே மீதமிருக்கும். ( இந்த உண்மையை முஸ்லிம்களுக்கு உணர்த்தித்தந்த அல்லாஹ் மிக்கது தூய்மையானவன்)

((வபஸ்ஸ மின்ஹுமா ரிஜாலான் கஸீரவ் வன்னிஸாஆ; அவ்விருவரிலிருந்தும் அதிகமான ஆண்களையும், பெண்களையும் பரவச் செய்தான்.))

ஆதம், ஹவ்வா என்ற இருவரிலிருந்துமே மனித வர்க்கத்தை அல்லாஹ் பெருகச் செய்தான்.

எனவே ஈஸா நபி தவிர்த்து, ஒரு மனிதன் உலகிற்கு வரவேண்டுமா அல்லாஹ் வைத்த நியதி, அவனுடைய நாட்டத்துடன், ஒரு ஆண் பெண் குடும்ப வாழ்க்கையில் ஈடுபடவேண்டும் என்பதே.

எனவே ஆதமவர்களை நேரடியாக படைத்து, அவரிலிருந்து ஹவ்வா அவர்களை படைத்த அல்லாஹ், மனிதஇன பரவலாக்களை ஆணின் இந்திரியத்திலும், பெண்ணின் சினை முட்டையிலும் வைத்திருக்கின்றான்.

மனிதன் எதிலிருந்து படைக்கப்பட்டான் என்பதை கவனிக்கட்டும்.86:6. குதித்து வெளிப்படும் (ஒரு துளி) நீரினால் படைக்கப்பட்டான்.86:7. முதுகந் தண்டிற்கும், விலா எலும்புகளுக்கும் இடையிலிருந்து அது வெளியாகிறது.86:8. இறைவன் (மனிதன் இறந்த பின் அவனை உயிர்ப்பித்து) மீட்டும் சக்தியுடையவன். (86:5-7)

மனிதர்களே! (இறுதித் தீர்ப்புக்காக நீங்கள்) மீண்டும் எழுப்பப்படுவது பற்றி சந்தேகத்தில் இருந்தீர்களானால், (அறிந்து கொள்ளுங்கள்;) நாம் நிச்சயமாக உங்களை (முதலில்) மண்ணிலிருந்தும் பின்னர் இந்திரியத்திலிருந்தும், பின்பு அலக்கிலிருந்தும்; பின்பு உருவாக்கப்பட்டதும், உருவாக்கப்படாததுமான தசைக் கட்டியிலிருந்தும் படைத்தோம்;.... (22:5)

அடுத்து; உலகில் முஸ்லிமோ காபிரோ ஒரே ஆத்மாவிலிருந்து வந்தவர்கள், பிறப்பில் அவர்கள் ஒன்றுபட்டவர்கள், அவர்களுக்கு மத்தியில் ஏற்றத்தாழ்வு கட்பிக்கமுடியாது என்கிற உண்மையையும் இந்த வசனத்திலிருந்து மனித சமூகம் பாடம் எடுக்கவேண்டும். படைத்தவனை புரிவதில்தான் குழப்பம் ஏற்பட்டுள்ளது என்ற பாடத்தையும் பெறும்போது உலகில் நிம்மதியான வாழ்க்கைக்கு அது இட்டுச்செல்லும், இதனை புரியாத மனிதர்கள் அடுத்த மனிதர்களை அளித்து நாசமாக்க நினைக்கிறார்கள் என்பதே நாம் உலகில் காணும் உண்மை.

((வத்தகுல்லாஹல்லதீ தஸாஅலூன பிஹீ; எவனைக்கொண்டு நீங்கள் ஒருவருக்கொருவர் (தமக்குரிய உரிமைகளைக்) கேட்டுக் கொள்கிறீர்களோ அந்த அல்லாஹ்வையே பயந்து கொள்ளுங்கள்; ))

இந்த வசனம் மூலம் அல்லாஹ்வை பயந்து கொள்ளுங்கள் என்று சொல்ல விரும்பும் அல்லாஹ் மனிதனது ஒரு இயல்பை சுட்டிக்காட்டி புத்திமதி சொல்கிறான். அதுதான்; 'மனிதன் இயல்பாகவே தன்னை நியாயப்படுத்த, தன் உரிமையை கேட்க, பிரச்சனையை முடிவுக்கு கொண்டுவர அல்லாஹ்வை இறைவனை முற்படுத்துகிறான்', உதாரணமாக, அல்லாஹ்வுக்காக என்னை நம்பு, அல்லாஹ்வுக்கா தந்துவிடு, அல்லாஹ்வின் மீது சத்தியமாக என்பது போன்று. இதன் மூலம் அல்லாஹ் உணர்த்த விரும்புவது என்ன, மனிதா உனது தேவைகளுக்கு அல்லாஹ்வை முற்படுத்தும் நீ, அதே இறைவனை பொது

வாழ்வில், குறிப்பாக இந்த வசனத்தில் சொல்லப்பட்டதை நடைமுறை படுத்துவதில் பயந்து நடக்க வேண்டாமா என்பதே!.

((வல் அர்ஹாம்; மேலும் ( உங்கள்) இரத்தக் கலப்புடைய உறவினர்கள் விடயத்திலும் பயந்து கொள்ளுங்கள்.))

இந்த சொற்றோடர் மூலம் அல்லாஹ் மனிதனுக்கு இன்னுமொறு இயல்பை சுட்டிக்காட்ட விரும்புகின்றான்.

முன்னால் சொல்லப்பட்டது போன்று, ஒரு மனிதன் இந்த உலகிற்கு தானாக வரமுடியாது, அவன் உலகில் பிறப்பதாக இருந்தால் ஒரு ஆண் பெண் சம்பந்தப்பட்ட வேண்டும், அவர்களை பெற்றோர்கள் என்கிறோம்,

நாம் இந்த உலகிற்கு வர எந்த அல்லாஹ்வின் நாட்டம் தேவையோ அந்த அல்லாஹ்வை பயந்து நடக்க சொன்ன அல்லாஹ், நாம் இங்கு பிறக்க யார் காரணமாக இருந்தார்களோ அந்த பெற்றோர்களையும், அவர்களை சார்ந்த உறவுகளையும் துண்டித்து விடாமல், அவர்களுக்கு செய்யவேண்டிய கடமைகளை செய்வதிலும் பயந்து நடக்க சொல்கிறான் அல்லாஹ்.

படைத்தவனை சரியாக புரிந்த மனிதன், மனிதனையும், அவனுக்கு செய்யவேண்டிய கடமைகளையும் சரியாக புரிந்து நடக்கும் போதே உலகிலும் நிம்மதியான வாழ்க்கை, மறுமையிலும் வெற்றி கிடைக்கும்.

எனவே இந்த வசனத்தின் மூலம் " மனிதனின் ஈருலக வெற்றிக்குமான அழகானதொரு வழிகாட்டல் இருக்கிறது" என்ற சுருக்கமான செய்தியை புரிந்து கொள்ளலாம்,

குடும்ப உறவு, சகோதரத்துவம் சார்ந்த சில வழிகாட்டல்களை நோக்குவோம்!

… நீங்கள் பூமியில் குழப்பம் உண்டாக்கி உங்கள் உறவினர்களை துண்டித்து விடவும் முனைவீர்களோ?47:23. இத்தகையோரைத் தாம் அல்லாஹ் சபித்து, இவர்களைச் செவிடாக்கி இவர்கள் பார்வைகளையும் குருடாக்கி விட்டான்.:47:24. மேலும் அவர்கள் இந்தக் குர்ஆனை ஆராய்ந்து பார்க்க வேண்டாமா? அல்லது அவர்கள் இருதயங்கள் (இருக்கின்றனவே) அவற்றின் மீது பூட்டுப் போடப்பட்டு விட்டனவா? (47:22-24)

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ் படைப்புகளைப் படைத்து முடித்தபோது, உறவானது எழுந்து அன்பாளன் அல்லாஹ்வின் அரியாசனத்தின் கால்களில் ஒன்றைப் பற்றி(க் கொண்டு மன்றாடி)யது. அப்போது அல்லாஹ், 'என்ன?' என்று கேட்டான். அதற்கு உறவு, 'உறவுகளைத் துண்டிப்பதிலிருந்து உன்னிடம் பாதுகாப்புக் கோரி நிற்கிறேன்' என்று கூறியது. 'உன்னை (உறவைப்) பேணி நல்ல முறையில் நடந்து கொள்பவருடன் நானும் நல்லமுறையில் நடந்துகொள்வேன் என்பதும், உன்னைத் துண்டித்துவிடுகிறவரை நானும்

துண்டித்து விடுவேன் என்பதும் உனக்குத் திருப்தியளிக்க வில்லையா?' என்று கேட்டான். அதற்கு உறவு, 'ஆம் ( திருப்தியே) என் இறைவா!' என்று கூறியது. அல்லாஹ் 'இது (அவ்வாறுதான்) நடக்கும்' என்று கூறினான்.

அறிவிப்பாளர் அபூ ஹுரைரா(ரலி), 'நீங்கள் விரும்பினால் '(நயவஞ்சகர்களே!) நீங்கள் ( போருக்கு வராமல்) பின்வாங்கிக் கொண்டு பூமியில் குழப்பம் விளைவிக்கவும், உங்கள் உறவுகளைத் துண்டிக்கவும் முனைகிறீர்களா?' எனும் (திருக்குர்ஆன் 47:22 வது) வசனத்தை ஓதிக்கொள்ளுங்கள்' என்று கூறினார்கள். (புஹாரி: 4830, முஸ்லிம்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்' உறவை முறித்து வாழ்பவன் சொர்க்கத்தில் நுழையமாட்டான்.(புஹாரி:5984, முஸ்லிம்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'ஒருவர் செல்வ வளம் தமக்கு வழங்கப்பட வேண்டும் அல்லது தம் வாழ்நாள் அதிகரிக்கப்படவேண்டும்' என்று விரும்பினால் அவர் தம் உறவினர்களுடன் சேர்ந்து வாழட்டும்!' (புஹாரி: 2067, முஸ்லிம்)

இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: அல்லாஹ்வையும் மறுமை நாளையும் நம்பிக்கை கொண்டவர் தம் இரத்தபந்த உறவுகளைப் பேணி வாழட்டும். ... (புஹாரி: 6138, முஸ்லிம்)

இதனை புரிந்த மனிதன், தன் வாழ்வில் நடைமுறைபடுத்த வேண்டுமா அதற்கான நல்லதோர் அறிவுரையைக் கூறி இந்த வசனத்தை முடிக்கிறான் அல்லாஹ்!

((இன்னல்லாஹ கான அலைகும் ரகீபா; நிச்சியமாக அல்லாஹ் உங்களை கண்காணிப்பவனாக இருக்கிறான்.))

இந்த வசனத்தில் சொல்லப்பட்ட விடயங்கள் உற்பட மனிதனின் செயல்களை அல்லாஹ் கண்காணிக்கிறான் என்கிற இந்த உணர்வு யார் உள்ளத்தில் ஆழமாக பதிந்திருக்குமோ அவனே உண்மை முஸ்லிமாக, அல்லாஹ்வின் கட்டளைகளை ஏற்று வாழப்போகிறான்.

மேலும் நிச்சயமாக நாம் மனிதனைப் படைத்தோம், அவன் மனம் அவனிடம் என்ன பேசுகிறது என்பதையும் நாம் அறிவோம்; அன்றியும், (அவன்) பிடரி(யிலுள்ள உயிர்) நரம்பை விட நாம் அவனுக்கு சமீபமாகவே இருக்கின்றோம்.50:17 (மனிதனின்) வலப்புறத்திலும், இடப்புறத்திலும் அமர்ந்து எடுத்தெழுதும் இரு(வான)வர் எடுத்தெழுதும் போது-50:18. கண்காணித்து எழுதக்கூடியவர் அவனிடம் ( மனிதனிடம்) இல்லாமல் எந்த சொல்லையும் அவன் மொழிவதில்லை. (50:16-18)

உண்மையில் எப்போது ஒரு மனிதன் அல்லாஹ் பார்க்கின்றான் என்ற உணர்வோடு வாழ்கின்றானோ அப்போது அவன் நல்லவனாக வாழ்வான், எப்போது என்னை பார்க்க யாருமில்லை, என்னை கேள்வி கேட்க யாருமில்லை என்று முடிவெடுக்கின்றானோ அப்போது அவன் நாசமாகி செல்வதற்கு அந்த சிந்தனை காரணமாகிவிடுகின்றது, அதனால்தான் ஒருவன் நல்லவனாக வாழ்வதற்கு என்ன தேவை "மல் இஹ்ஸான்" என்று ஜிப்ரீல் அலை அவர்கள் நபிகளாரிடம் கேட்டபோது, நபியவர்கள்; 'நீ அல்லாஹ்வை பார்ப்பது போன்று வாழ்வது, அல்லது நீ பார்க்காவிட்டாலும் அவன் உன்னை பார்க்கிறான் என்ற உணர்வில் வாழ்வது" (புஹாரி:50) என்று பதில் கூறினார்கள்.

எனவே எங்களை கண்காணித்துக் கொண்டிருக்கும் அல்லாஹ்வை முறையாக பயந்து, எம்மிடத்திலுள்ள கடமைகளை சரியாக நிறைவேற்றி உலகிலும் நல்லவர்களாக வாழ்ந்து, மறுமையிலும் வெற்றிபெற முயல்வோம்.

இந்த வசனத்தில் இவ்வளவு ஆழமான கருத்து இருப்பதனாலோ அல்லாஹ்வின் தூதர் தனது உரைகளின் துவக்கத்தில் இந்த வசனத்தை பெரும்பாலும் ஓதுபவர்களாக இருந்திருக்கின்றார்கள். (அல்லாஹு அ:லம்)

இனி அடுத்த வசனத்தை நோக்குவோம் ; மனிதர்களில் அதிகம் பாதிக்கப்படும் அநாதைகள் பற்றி பேசுகின்றது. இதற்கும் முந்திய வசனத்திற்கும் ஏதாவது தொடர்பு இருக்கின்றதா என்று நோக்கினால், ஆச்சர்யமான ஒரு தொடர்பைப் பார்க்கலாம் அதுதான், வசனத்தில் ஒரு மனிதன் உலகிற்கு வருவதற்கு தாய் தந்தை என்ற உறவு அவசியம் என்று கூறி, அந்த இரத்த உறவுகளோடு நல்லமுறையில் நடக்குமாறு கூறியது அந்த வசனம், இந்த வசனம் அந்த தாய் தந்தை என்ற உறவில் முக்கிய பகுதியான தந்தையை இழந்த அநாதைகள் விடயத்தில் நல்லமுறையில் நடக்குமாறு சில வசனங்கள் மூலம் அறிவுரை சொல்கின்றது அடுத்த வசனம். அல்லாஹ் கூறுகின்றான்,

وَاٰ تُوا الْيَتٰمٰٓى اَمْوَالَهُمْ وَلَا تَتَبَدَّلُوا الْخَبِيْثَ بِالطَّيِّبِ وَلَا تَاْكُلُوْٓا اَمْوَالَهُمْ اِلٰٓى اَمْوَالِكُمْ اِنَّهٗ كَانَ حُوْبًا كَبِيْرًا

நீங்கள் அநாதைகளின் பொருட்களை (அவர்களுக்கு வயது வந்தவுடன் குறைவின்றிக்) கொடுத்து விடுங்கள்; நல்லதற்குப் பதிலாக கெட்டதை மாற்றியும் கொடுத்து விடாதீர்கள்; அவர்களுடைய பொருட்களை உங்கள் பொருட்களுடன் சேர்த்துச் சாப்பிட்டு விடாதீர்கள் - நிச்சயமாக இது பெரும் பாவமாகும். (4:2)

## இரண்டாவது வசனம் தரும் படிப்பினைகள்;

((வஆதுல் யதாமா அம்வாலஹும்; அநாதைகளுக்கே அவர்களது சொத்துக்களை கொடுத்துவிடுங்கள்.))

இந்த வசனத்தில் அநாதை ( யதீம்) மூலம் நாடப்படுவது; தந்தையை இழந்த, வயதுக்கு வராத சிறுவர்களையே குறிக்கும். அதன் பன்மை சொல்லே (யதாமா) என்பது.

ஒருவர் மரணித்துவிட்டால் அவரது சொத்தில் அவரது பிள்ளைகளுல் சிறுபராயத்தில் இருப்பவர்களுக்கும் அவர்களது பங்கு சேர்க்கப்படவேண்டும் என்பதே முதல் கட்டளை. அடுத்து,

((வலா ததபத்தலுள் கபீஸ பித்தையிப்; நல்லவற்றுடன் மோசமானதை கலந்துவிடாதீர்கள்))

ஒருவருக்கு சொந்தமான சொத்து மாத்திறமே ஒருவருக்கு நல்லது, அடுத்தவர்களின் சொத்து அல்குர்ஆன் பார்வையில் அசுத்தமானதே, அல்லாஹ் என்ன சொல்லவருகிறான்; அநாதைகள் சொத்து தனியாக பாதுகாக்கப்பட வேண்டும், வித்தியாசப்படுத்த முடியாத அளவு மற்றவர்களின் சொத்துக்களில் கலந்துவிடக்கூடாது என்பது. அல்லாஹு அக்பர்!!! அடுத்தவர் சொத்தில் கலப்பதே கூடாது என்றால் அவர்களது சொத்துக்களை அவர்களுக்கு கொடுக்காமல் இருப்பது.!!!

((வலா தஃகுலூ அம்வாலஹும் இலாஅம்வாலிகும்; அவர்களது சொத்துக்களை உங்கள் சொத்துக்களுடன் சேர்த்து சாப்பிடாதீர்கள்.))

அநாதையை பராமரிப்பவன் சேர்ந்து வாழும் போது கூட அவர்களது சொத்து தனது சொத்துக்களுடன் சேர்ந்திருக்கும் நிலையில் வேண்டும் என்று சாப்பிட்டுவிடக்கூடாது என்பது இறை கட்டளை. உதாரணமாக; அநாதையை பராமரிப்பவர் ஒரு நேர உணவுக்காக சராசரி இருநூறு ரூபாய் செலவாகும் இடத்தில் பராமரிப்பவர் ஐம்பது ரூபாய் பங்கு கொள்ள, அனாதையின் சொத்தில் நூற்றி ஐம்பது சேர்ந்திருக்க அதனை பராமரிப்பவர் சாப்பிடக்கூடாது என்பதே இறைக்கட்டளை என்றால் அல்லாஹு அக்பர்! நாம் எவ்வளவு கவனமாக நடக்க வேண்டும்.

அடுத்து இந்த வசனத்தை அல்லாஹ் முடிக்கும் விதம் தீர்ப்பை மிகத் தெளிவாக படம் பிடித்துக் காட்டுகின்றது, அல்லாஹ் கூறுகின்றான்:

((இன்னஹு கான ஹூபன் கபீரா; நிச்சியமாக அது பெரும் பாவமாகும்)

எனவே அநாதைகள் சொத்துக்களை அவர்களுக்கு முறையாக கொடுக்காமல் இருப்பது, அவர்களது சொத்தை பராமரிப்பவர் சொத்தோடு வித்தியாசப்படுத்த முடியாத நிலையில் கலந்துவிடுவது, அவர்களது சொத்துக்களை வரம்பை மீறி சாப்பிடுவது அனைத்தும் பெரும் பாவம் என்பதே இந்த வசனம் விடும்

எச்சரிக்கை! இதனை அல்குர்ஆனும் நபிவழியும் பல இடங்களில் எச்சரித்துள்ளது. அது பற்றி பத்தாவது வசனத்தில் தெளிவாக நோக்கலாம்.

இந்த வசனத்தின் அறிவுரையை பார்க்கும் போது அன்றைய ஜாஹிலிய்ய சமூகத்தில் அனாதைகளை பொறுப்பேற்பதும் சொத்துக்களை அவர்களுக்கு சேர்ப்பிப்பதும் சாதாரணமாக இருந்திருக்கிறது, பராமரிப்பில்தான் தவறிவிட்டிருக்கின்றார்கள் என்பது புலப்படுகின்றது, ஆனால் இன்றைய நவீன ஜாஹிலிய்யத்தில் பொறுப்பேற்பதுமில்லை, சொத்துக்களை கொடுப்பதுமில்லை, பராமரிப்பதுமில்லை என்கிற நிலை அநாதை பராமரிப்பு நிலையங்கள் அதிகரிப்பதை பார்க்கலாம்.

இன்றைய சமூகம் அன்றைய ஜாஹிலிய்ய சமூகத்தை விடவும் மோசமாக இருக்கிறது என்பது மட்டும் தெளிவு.

அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: 'நானும் அநாதையின் காப்பாளரும் சொர்க்கத்தில் இப்படி இருப்போம்' என்று கூறியபடி தம் சுட்டுவிரலையும் நடுவிரலையும் இணைத்து அந்த இரண்டுக்குமிடையே சற்று இடைவெளிவிட்டு சைகை செய்தார்கள். (புஹாரி:5304, முஸ்லிம்)

இனி அடுத்த வசனம் அந்த சமூகத்தில் இருந்த இன்னுமொரு அநாதை துஷ்பிரயோகத்தை எமக்கு எடுத்துக் காட்டி, எமக்கு புத்திமதி சொல்கிறது. அல்லாஹ் கூறுகிறான்:

وَاِنْ خِفْتُمْ اَلَّا تُقْسِطُوْا فِى الْيَتٰمٰى فَانْكِحُوْا مَا طَابَ لَـكُمْ مِّنَ النِّسَآءِ مَثْنٰى وَثُلٰثَ وَرُبٰعَ‌ ۚ
فَاِنْ خِفْتُمْ اَلَّا تَعْدِلُوْا فَوَاحِدَةً اَوْ مَا مَلَـكَتْ اَيْمَانُكُمْ‌ ؕ ذٰ لِكَ اَدْنٰٓى اَلَّا تَعُوْلُوْا ؕ

அநாதை(ப் பெண்களைத் திருமணம் செய்து அவர்)களிடம் நீங்கள் நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தீர்களானால், உங்களுக்குப் பிடித்தமான பெண்களை மணந்து கொள்ளுங்கள் - இரண்டிரண்டாகவோ, மும்மூன்றாகவோ, நன்னான்காகவோ; ஆனால், நீங்கள் (இவர்களிடையே) நியாயமாக நடக்க முடியாது என்று பயந்தால் ஒரு பெண்ணையே (மணந்து கொள்ளுங்கள்), அல்லது உங்கள் வலக்கரங்களுக்குச் சொந்தமான (ஓர் அடிமைப் பெண்ணைக் கொண்டு) போதுமாக்கிக் கொள்ளுங்கள் - இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும். (4:3)

## மூன்றாவது வசனம் தரும் படிப்பினைகள்;

(வஇன் கிப்தும் அல்லா துக்ஸிதூ பில் யதாமா; நீங்கள் அநாதைகள் (திருமணம் முடிக்கும்) விடயத்தில் நீதம் செலுத்தாமல் இருப்பதை பயந்தால் ))

இந்த வசனத்தை ஆயிஷா நாயகியின் கூற்றை வைத்து மிகத்தெளிவாக புரிந்துகொள்ளலாம்.

உர்வா இப்னு ஸுபைர்(ரஹ்) அவர்கள் கூறினார்கள்: நான் ஆயிஷா(ரலி) அவர்களிடம், 'அநாதைப் பெண்களை மணந்துகொண்டு அவர்)களின் விஷயத்தில் நீதி செலுத்த இயலாது என நீங்கள் அஞ்சினால் உங்களுக்கு விருப்பமான பெண்களை இரண்டிரண்டாக, மும்மூன்றாக நான்கு நான்காக நீங்கள் மணந்து கொள்ளலாம்' எனும் ( திருக்குர்ஆன் 04:3 வது) இறைவசனம் குறித்துக் கேட்டேன். அதற்கு அவர்கள் (பின்வருமாறு) விளக்கமளித்தார்கள்:

என் சகோதரி (அஸ்மாவின்) மகனே! இந்த (வசனத்தில் கூறப்பட்டுள்ள) பெண், தன் காப்பாளரின் பொறுப்பில் வளர்கிற அவரின் செல்வத்தில் கூட்டாக இருக்கிற அநாதைப் பெண் ஆவாள். அவளுடைய செல்வத்தாலும் அழகாலும் கவரப்பட்டு, அவளுடைய காப்பாளர் அவளுடைய மஹ்ர் ( விவாகக் கொடை) விஷயத்தில் நீதியுடன் நடக்காமல் - மற்றவர்கள் அவளுக்கு அளிப்பது போன்ற மஹ்ரை அவளுக்கு அளிக்காமல் - அவளை மணந்துகொள்ள விரும்புகிறார் எனும் நிலையில் இருப்பவள் ஆவாள்.

இவ்விதம் காப்பாளர்கள் தம் பொறுப்பிலிருக்கும் அநாதைப் பெண்களை அவர்களுக்கு நீதி செலுத்தாமல் அவர்களைப் போன்ற பெண்களுக்குக் கொடுக்கப்படும் மஹ்றில் மிக உயர்ந்த மஹ்ர் எதுவோ அதை அவர்களுக்கு அளிக்காமல் அவர்களை மணந்துகொள்ள அவர்களுக்கு (இந்த இறைவசனத்தின் வாயிலாக)த் தடை விதிக்கப்பட்டது. அந்தப் பெண்களைத் தவிரவுள்ள மற்றப் பெண்களில் தங்களுக்கு விருப்பமான பெண்களை மணந்துகொள்ளும்படி அவர்களுக்குக் கட்டளையிடப்பட்டது...... (புஹாரி:5064, 2494.... முஸ்லிம்)

இரண்டு விடயங்கள், ஒன்று அவர்களது சொத்தில் ஆசை வைப்பது, மற்றவிடயம், சாதாரண பெண்களுக்கு கொடுக்கும் மஹறைவிட குறைத்து கொடுத்தல் இதனையே அநியாயம் என்கிறது குர்ஆனும் ஆயிஷா நாயகியின் கூற்றும். எனவே இந்த அநியாயத்தை ஒழிக்கவே தந்தை போன்ற பொறுப்பாளிகள் உயிரோடிருக்கும் பெண்களை மணக்குமாறு அல்லாஹ் கட்டளை இடுகின்றன.

(பன்கிஹூ மாதாபலகும் மினன் நிஸா:; பெண்களில் உங்களுக்கு பிடித்தமானவர்களை மணந்துகொள்ளுங்கள்.)

இங்கு அல்லாஹ் பெண்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுவதற்கான ஒரு வழியாக பாதுகாவலர்களை அல்லாஹ் குறிப்பிடுகின்றான், அவரே திருமணத்தில் பெண் தரப்பில் வலீ என்று அழைக்கப்படுகின்றார். நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: வலீ பொறுப்பாளி இன்றி திருமணம் இல்லை. (அஹ்மத்:19518, திர்மிதீ, அபூதாவூத்)

ஜாஹிலிய்ய சமூகத்தின் நிலை இப்படியிருக்க, இன்றைய முஸ்லிம்களின் நிலையைப் பார்த்தால் அதனைவிடவும் மோசமானதே, ஏன், ஜாஹிலிய்ய மக்கள் தன் பொறுப்பில் இருந்த அனாதைகள் சொத்தையே அபகரிக்க முற்பட்டனர், ஆனால் இன்றைய முஸ்லிம்கள் பொறுப்பாளிகளிடமே மகளுக்கும் சகோதரிகளுக்கும் விலைபேசி, சீதனப் பிச்சை கேட்கிறார்கள், மஹரை மிகவும் குறைத்துக் கொடுக்கிறார்கள் என்றால், எவ்வளவு கேவலமான செயல், நிச்சியமாக இது அநியாயம், அல்லாஹ் நம்மை பாதுகாப்பானாக.

அடுத்து திருமணத்தில் ஆண்களுக்கு கொடுத்திருக்கும் உரிமை பற்றி பேசுகின்றான்;

((மா தாப லகும் மினான் நிசா; உங்களுக்கு விரும்பிய பெண்கள்))

என்பதன் மூலம் , ஆண்கள் விரும்பியே முடிக்கவேண்டும் என்பதும் சுட்டிக்காட்டப்படுகின்றது, மாறாக அவர்கள் பெற்றோர்கள் மூலமோ வேறு குடும்பத்தவர்கள் மூலமோ பலவந்தப்படுத்த முடியாது என்பதும் தெளிவு , ஒரு ஆண் தனக்குரிய மனைவியை தேர்வு செய்வதில் பூரண உரிமை கொடுக்கப்பட்டுள்ளான். பெண்கள் விடயத்தில் தான் பொறுப்பாளி அனுமதி கேட்டு அவர்களுடைய விருப்பத்துடன் செய்துவைக்க வேண்டும்.

அபூஹுரைரா ( ரலி) அவர்கள் கூறியதாவது: நான் ( ஒரு முறை) நபி ( ஸல்) அவர்கள் அருகில் இருந்தேன். அப்போது அவர்களிடம் ஒரு மனிதர் வந்து, தாம் அன்சாரிகளில் ஒரு பெண்ணை மணமுடிக்கப்போவதாகத் தெரிவித்தார். அவரிடம் அல்லாஹ்வின் தூதர் ( ஸல்) அவர்கள், "நீர் அந்தப் பெண்ணைப் பார்த்துவிட்டீரா?" என்று கேட்டார்கள். அதற்கு அவர் " இல்லை" என்றார். அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள், "அவ்வாறாயின், நீர் சென்று அவளைப் பார்த்துக்கொள்ளும்! ஏனெனில், அன்சாரிகளின் கண்களில் சிறிது (குறை) உண்டு" என்று சொன்னார்கள். (முஸ்லிம்:2783)

அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்கள், 'கன்னிகழிந்த பெண்ணை, அவளுடைய ஆலோசனை பெறாமல் மணமுடித்துக் கொடுக்க வேண்டாம். கன்னிப் பெண்ணிடம் ( ஏதேனும் ஒருமுறையில்) அனுமதி பெறாமல் மணமுடித்துக் கொடுக்கவேண்டாம்" என்று கூறினார்கள். மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! எப்படி கன்னியின் அனுமதி(யைத் தெரிந்து கொள்வது)" என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், 'அவள் மௌனம் சாதிப்பதே (அவளுடைய சம்மதம்) என்று கூறினார்கள். (புஹாரி: 5136, முஸ்லிம்கள்)

கன்ஸா பின்த் கிதாம் அல்அன்சாரியா ( ரலி) கூறினார்கள்: கன்னி கழிந்த பெண்ணான என்னை என் தந்தை ( ஒருவருக்கு) மணமுடித்துவைத்தார்கள். எனக்கு இதில் விருப்பமிருக்கவில்லை. எனவே, நான் இறைத்தூதர்(ஸல்)

அவர்களிடம் போ(ய் என் விருப்பத்தைச் சொன்)னேன். அத்திருமணத்தை நபி(ஸல்) அவர்கள் ரத்துச் செய்தார்கள். (புஹாரி:5138)

((மஸ்னா வசுலாச வருபா ; இரண்டிரண்டாக, மும்மூன்றாக, நன்நான்காக திருமணம் முடித்துக் கொள்ளுங்கள்))

இங்கு இரண்டிரண்டாக மும்மூன்றாக என்பது மடங்கை குறிக்க வந்ததல்ல, மாறாக எண்ணிக்கையை குறிக்கவந்ததே, நான்கு மனைவியர்களை விட அதிகமாக ஒரே நேரத்தில் வைத்திருப்பதில் வேறு தடை இருக்கிறது. இப்னு அப்பாஸ் ரலி அவர்கள் ; 'நான்கைவிட அனுமதியிருந்திருந்தால் இங்கு அல்லாஹ் குறிப்பிட்டிருப்பான்' என்று கூறுவார்கள். (இப்னு கஸீர்)

இமாம் ஷாபிஈ (ரஹ்) அவர்கள் கூறினார்கள்: 'அல்லாஹ்விடமிருந்து நபிகளார் அறிவித்த விடயம், நான்கை விட அதிகமான மனைவியரை ஒரே நேரத்தில் வைக்க முடியாது என்பதே.' இதனை பதிந்த இப்னு கஸீர் இமாமவர்கள், 'இது இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் கருத்துவேற்றுமை இல்லாத இஜ்மாஃ என்றும், ஷீஆக்களில் ஒரு சாரார் இதற்கு மார்கமாக கூறினார்கள், அவர்களுள் சிலர் எண்ணிக்கையின்றி முடிக்கலாம் என்றும், சிலர் நபிகளார் போன்று ஒன்பதுவரை முடிக்கலாம் என்றும் கூறியுள்ளார்கள்' என்றும் கூறினார்கள். மேலும் நபியவர்கள் ஒன்பது பத்து வரை முடித்தது அவர்களுக்கு மாத்திரம் சொந்தமானது என்ற அறிஞர்களின் கூற்றையும் பதிந்தார்கள். (இப்னு கஸீர்)

நபிகளாருக்கு பிரத்தியேகமான சட்டம்; அல்லாஹ் கூறுகிறான்:

وَامْرَاَةً مُّؤْمِنَةً اِنْ وَّهَبَتْ نَفْسَهَا لِلنَّبِىِّ اِنْ اَرَادَ النَّبِىُّ اَنْ يَّسْتَنْكِحَهَا  خَالِصَةً لَّـكَ مِنْ دُوْنِ الْمُؤْمِنِيْنَ‌ؕ  قَدْ عَلِمْنَا مَا فَرَضْنَا عَلَيْهِمْ فِىْۤ اَزْوَاجِهِمْ وَمَا مَلَـكَتْ اَيْمَانُهُمْ لِكَيْلَا يَكُوْنَ عَلَيْكَ حَرَجٌ ‌ؕ وَكَانَ اللّٰهُ غَفُوْرًا رَّحِيْمًا

.......அன்றியும் முஃமினான ஒரு பெண் நபிக்குத் தன்னை அர்ப்பணித்து, நபியும் அவளை மணந்து கொள்ள விரும்பினால் அவளையும் (மணக்க நாம் உம்மை அனுமதிக்கின்றோம்); <u>இது மற்ற முஃமின்களுக்கன்றி உமக்கே (நாம் இத்தகு உரிமையளித்தோம்; மற்ற முஃமின்களைப் பொறுத்தவரை) அவர்களுக்கு அவர்களுடைய மனைவிமார்களையும், அவர்களுடைய வலக்கரங்கள் சொந்தமாக்கிக் கொண்டவர்களையும் பற்றி நாம் கடமையாக்கியுள்ளதை நன்கறிவோம்;</u> உமக்கு ஏதும் நிர்ப்பந்தங்கள் ஏற்படாதிருக்கும் பொருட்டே (விதி விலக்களித்தோம்); மேலும் அல்லாஹ் மிக மன்னிப்பவன்; மிக்க அன்புடையவன். (33:50)

இது பற்றிய ஹதீஸ்கள்:

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: கைலான் பின் ஸலமா அவர்கள், பத்து மனைவிமார்கள் இருக்கும் நிலையில் இஸ்லாத்தை ஏற்றார்கள்,

அவருக்கு நபியவர்கள், 'அவர்களில் நான்கு பேரை எடுத்துக்கொண்டு, அடுத்தவர்களை விட்டுவிடுவீராக" என்று கூறினார்கள். ( திர்மிதி: 1128, இப்னுமாஜா: 1953, அஹ்மத்:4609)

இதே அறிவிப்பு முர்ஸலாக இப்னு ஷிஹாப் அவர்கள் தனக்கு தகவல் கிடைத்தது என்று மாலிக் இமாம் ( முஅத்தா மாலிக்:79) வழியாக பதிவு செய்யப்பட்டிருக்கின்றது, சில அறிஞர்கள் முர்ஸல் என்பதுவே சரியானது என்றும் கூறுகின்றனர். அல்முஃஜமுல் அவ்சதில்:1680 இப்னு ஷிஹாப் அவர்கள் இல்லாத வேறு வழியாலும் பதியப்பட்டுள்ளது. வேறு நபித்தோழர்கள் வழியாக சில செய்திகள் பதியப்பட்டிருந்தாலும் அவை விமர்சனத்திற்குற்பட்டவையே! (அல்லாஹு அஃலம்) (இப்னு கஸீர் சுருக்கம்)

அடுத்து ஆண்களுக்கு நான்கு வரை திருமணம் முடிக்க அனுமதி வழங்கிய அல்லாஹ் அதற்கு முக்கியமான ஒரு நிபந்தனை இடுகின்றான், அதனையே அல்லாஹ் பின்வருமாறு கூறுகின்றான்;

((வஇன் கிப்தும் அல்லா தஃதிலூ பவாஹிததன், அவ்மா மலகத் ஐமானுகும்; நீங்கள் ( பல மனைவியரிடையே) நீதம் செலுத்தாமல் இருப்பதை பயந்தால் ஒன்றோடு போதுமாக்கிக் கொள்ளுங்கள், அல்லது உங்கள் வலக்கரம் சொந்தமாக்கிக்கொண்ட (அடிமையைக்)கொண்டு போதுமாக்கிக்கொள்ளுங்கள்.))

இந்த வசன தொடரில் அல்லாஹ் ( அநீதம் இளைக்கும் நிலை ஏற்பட்டால்) ஒன்றுடன் போதுமாக்கி கொள்ள சொல்கிறான் என்பது ஒன்று, அதிலும் நீதம் செலுத்த முடியாத நிலை என்றால் அடிமையுடன் வாழச்சொல்கிறான் என்றால், குடும்ப வாழ்வில் நீதம் செலுத்துதல் எவ்வளவு அவசியம் என்பதை புரிந்து கொள்ளலாம். இப்படி வாழ்வதே நீதத்தைக் கடைபிடிக்க உதவும் என்பதும் அல்லாஹ்வின் அறிவுரை, இரண்டை முடித்தவர் ஒரு மனைவிக்கு துரோகம் இளைக்கும் நிலை ஏற்பட்டால் ஒன்றோ அல்லது அடிமையோ போதுமானது, இதனையே அல்லாஹ் 4:129ல் தெளிவாக சொல்கிறான் அல்லாஹ்.

ஒரு பெண் தன் கணவன் தன்னை வெறுத்து விடுவான் என்றோ அல்லது புறக்கணித்து விடுவான் என்றோ பயந்தால், அவர்கள் இருவரும் தங்களுக்குள் (சமாதானமான) ஒரு முடிவைச் செய்து கொண்டால் அவ்விருவர் மீது குற்றமில்லை; அத்தகைய சமாதானமே மேலானது; இன்னும், ஆன்மாக்கள் கருமித்தனத்திற்கு உட்பட்டவையாகின்றன. அவ்வாறு உட்படாமல்) ஒருவருக்கொருவர் உபகாரம் செய்து, (அல்லாஹ்வுக்குப்) பயந்து நடப்பீர்களானால் நிச்சயமாக அல்லாஹ் நீங்கள் செய்பவற்றையெல்லாம் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான்.128, (முஃமின்களே!) நீங்கள் எவ்வளவுதான் விரும்பினாலும், மனைவியரிடையே நீங்கள் நீதம் செலுத்தல் சாத்தியமாகாது;

ஆனால் ( ஒரே மனைவியின் பக்கம்) முற்றிலும் சாய்ந்து மற்றவளை அந்தரத்தில் தொங்க விடப்பட்டவள் போன்று ஆக்கிவிடாதீர்கள்; நீங்கள் (அல்லாஹ்வுக்குப்) பயந்து சமாதானமாக நடந்து கொள்வீர்களானால், நிச்சயமாக அல்லாஹ் மிகவும் மன்னிப்பவனாகவும், மிக்க கருணையுடையவனாகவும் இருக்கின்றான்.4:130. (சமாதானமாக இணைந்து வாழ முடியாமல் சமாதானமாக) அவர்கள் இருவரும் பிரிந்துவிட்டால், அவ்விருவரையும் தன்னுடைய விசாலமான அருட்கொடையால், (ஒருவர் மற்றவரை விட்டும்) தேவையற்றவராக அல்லாஹ் ஆக்கிவிடுவான். அல்லாஹ் விசாலமான அருளுடையவனாகவும் ஞானமுடையவனாகவும் இருக்கின்றான். (4:129,130)

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான்:

((தாலிக அத்னா அல்லா தஊலூ; இதுவே நீங்கள் அநியாயம் செய்யாமலிருப்பதற்குச் சுலபமான முறையாகும்.))

எனவே ஒன்றுடன், அல்லது அடிமையுடன் போதுமாக்குவது அநியாயம் இழைப்பதை பயப்படும், அல்லது வாழ்வில் அநியாயம் செய்வோருக்கு சிறந்தது.

**குறிப்பு:** பலதார திருமணத்தில் அல்லாஹ் இவ்வளவு அழகாக சட்டம் சொல்லியிருக்கும் போது ஆண்களும் இதில் தவறு விடுகின்றார்கள், பெண்களும் இதில் தவறு விடுகின்றார்கள்.

பல மனைவியரை வைத்துக் கொண்டு இரவை பங்குவைப்பதில், பராமரிப்பில், செலவழிப்பதில் நீதம் செலுத்தாதோர் அல்லாஹ்வை அஞ்சி செற்படவேண்டும், ஒன்றோ நீதத்தைக் கடைபிடிக்க வேண்டும் அல்லது ஒன்றுடன் போதுமாக்க வேண்டும்.

பெண்களை பொறுத்தவரை அவர்கள் தெளிவாக விளங்க வேண்டும், இந்த உரிமை ஆண்களுக்கு அல்லாஹ் வழங்கியது, இதனை எதிர்ப்பது, அல்லது இரண்டாவது திருமணம் முடித்த கணவர் நீதமாக நடக்கும் போதும் அவரை எதிர்ப்பது அல்லாஹ்வின் சட்டத்திற்கு எதிராக போர்க்கொடி தூக்குவதாகும். மனைவியின் குடும்பத்தவரும் விளங்க வேண்டும் ஒரு ஆண் இரண்டாவது திருமணம் முடிப்பது தங்கள் பெண்ணுக்கு செய்யும் துரோகமல்ல என்பதை.

உண்மையில் பல திருமணம் முடித்த கணவன் தன்னோடு நீதமாக நடப்பதில்லை என்று ஒரு பெண் தெளிவாக கண்டால் அவளுக்கு ஒதுங்கிக் கொள்ளும் உரிமையை இஸ்லாம் கொடுத்துமிருக்கின்றது.

அதனையே 4:128, 129, 130 எமக்கு தெளிவு படுத்துகிறது. இஸ்லாம் யாருக்கும் அநியாயம் இழைக்காது அது நீதமான மார்க்கம். அல்லாஹ்வே இந்த சட்டங்களை புரிந்து நடக்கும் பாக்கியத்தை எங்களுக்கு தரவேண்டும்.

وَاٰ تُوا النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ؕ   فَاِنْ طِبْنَ لَكُمْ عَنْ شَىْءٍ مِّنْهُ نَفْسًا فَكُلُوْهُ هَنِيْٓـــًٔا مَّرِيْٓـــًٔا

நீங்கள் (மணம் செய்து கொண்ட) பெண்களுக்கு அவர்களுடைய மஹர் (திருமணக்கொடை)களை மகிழ்வோடு (கொடையாக) கொடுத்துவிடுங்கள் - அதிலிருந்து ஏதேனும் ஒன்றை மனம் விரும்பி அவர்கள் உங்களுக்கு கொடுத்தால் அதைத் தாராளமாக, மகிழ்வுடன் புசியுங்கள். (4:4)

நான்காவது வசனம் தரும் படிப்பினைகள்;

இந்த வசனம் திருமணம் முடிக்கும் ஆணுக்கு உள்ள கடமையையும், பெண்ணுக்கு உள்ள உரிமையையும் எடுத்துரைக்கின்றது.

((வஆதுன் நிஸாஅ சதுகாதிஹின்ன நிஹ்லா; பெண்களுக்கு அவர்களது (மஹர்) கொடையை கட்டாயமாக கொடுத்துவிடுங்கள்))

இந்த வசனம் மூலம் மஹர் எனும் பெண்களுக்கான திருமண கொடையை கொடுக்க சொன்ன அல்லாஹ் (சதுகாதிஹின்ன) அவர்களது மஹர் என்று கூறுகின்றான், எனவே மஹரை தீர்மானிக்கும் அந்த உரிமை பெண்களுக்கே இருக்கிறது என்பதை சூசகமாக இந்த வசனம் எடுத்துரைக்கின்றது. அடுத்து திருமணத்துக்கு பின்னும் அது அவளுக்கே சொந்தமானது, அவளுக்கே அதில் அதிகாரமும் இருக்கின்றது, அதனால் தான் அல்லாஹ் அடுத்த தொடரில் பின்வருமாறு கூறுகின்றான்:

((பஇன் திப்ன லகும் அன் ஷைஇன் மின்ஹு நப்ஸன் பகுலூஹு ஹனீஅன் மரீஆ; எனவே அவர்களாக ஏதேனும் ஒன்றை மனம் விரும்பி கொடுத்தாள் மனவிருப்பத்துடன் அதனை சாப்பிடுங்கள்))

எனவே அவளது மஹர் தொகையில் யாருக்கும் அதிகாரம் செலுத்த முடியாது. கணவன் கொடுத்ததிலேயே அவருக்கு அதிகாரம் இல்லை எனும் போது, இன்று நடை முறையில் இருப்பது போன்ற பெண் வீட்டாரை கொடுமைப் படுத்துகின்ற சீதனம், பலவந்த பெண் வீட்டு சாப்பாடு, திருமணத்தின் பின்னரான அபகரிப்பு எந்த நிலையில் வருமோ, அனைத்தையும் அறிந்த அல்லாஹ்வே இந்த அநியாயங்களில் இருந்து நம் சமூகத்தை பாதுகாக்க வேண்டும்.

மஹரின் அவசியம்; ஒரு பெண்ணைப் பொறுத்தவரை திருமண வாழ்க்கை மூலம் அவள் உடலில் காணப்படும் கற்பை இலக்கின்றாள், எனவே அதற்கு ஈடாக இஸ்லாம் மஹரை ஆண்கள் மீது கட்டாயப்படுத்தியுள்ளது, ஒரு பெண்ணின் கற்புக்கு அவளே பெறுமதி தீர்மானிக்க உரிமை உள்ளவள், என்ற அடிப்படையில் குடும்ப உறவுகளோடு சேர்ந்து அதனை தீர்மானிக்கலாம்.

ஆனால் இன்று மஹர் என்பது பெறுமதியற்ற ஒன்றாக மாறி, பெண்களிடம் பறிக்கப்படும் சீதனம் பெறுமதி உள்ள ஒன்றாக மாறி, அதற்காகவே பேச்சுவார்த்தை நடக்கிறது, அதனால் பெண் சமூகம் குடும்ப வாழ்வில் பாதிப்படைவதை கண்கூடாக காணலாம்.

குடும்ப வாழ்வில் பாதிக்கப்படும் அந்தப் பெண் அநியாயக்கார மாப்பிள்ளையிடமிருந்து பிரிய பயப்படுகின்றாள், காரணம் சீதனம் கொடுத்து இன்னொரு திருமணம் முடிப்பது சாத்தியமற்றது என்பதனால்.

எனவே இஸ்லாம் வழங்கும் மஹர் என்ற உரிமை அவளுக்கு சரியாக வழங்கப்படுமாக இருந்தால் நிச்சியமாக பெண்களின் பாதுகாப்பு பலப்படுத்தப்படும். என்பது உண்மை.

அடுத்து, திருமணத்திற்கு முன்னரே மஹரை தீர்மானிப்பது மிக அவசியமான ஒன்றாகும், முடியவில்லை என்றால் திருமணத்தின் பிறகாவது தீர்மானிக்கவேண்டும். இஸ்லாம் அதில் அதிக கவனம் செலுத்துகின்றது.

ஸஹ்ல் இப்னு ஸஃத்(ரலி) அவர்கள் கூறினார்கள்: ஒரு பெண்மணி நபி(ஸல்) அவர்களிடம் வந்து, அல்லாஹ்வுக்கும் அவனுடைய தூதருக்கும் தம்மை அன்பளிப்புச் செய்துவிட்டதாகக் கூறினார். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , 'எனக்கு எந்தப் பெண்ணும் தேவையில்லை' என்று கூறினார்கள். அப்போது அங்கிருந்த ஒருவர் 'இந்தப் பெண்ணை எனக்கு மணமுடித்து வையுங்கள்' என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள், 'ஏதேனும் ஆடையொன்றை அவளுக்கு ( 'மஹ்ர்' எனும் விவாகக் கொடையாக)க் கொடு!' என்று ( அந்த மனிதரிடம்) கூறினார்கள். அவர், 'என்னிடம் இல்லை' என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள், 'அவளுக்கு ( எதையேனும் மஹராகக்) கொடு! அது இரும்பாலான மோதிரமாக இருந்தாலும் சரியே' என்று கூறினார்கள். இதைக்கேட்டு அந்த மனிதர் கலங்கினார். எனவே, நபி(ஸல்) அவர்கள், 'குர்ஆனிலிருந்து உன்னிடம் என்ன ( மனனமாக) இருக்கிறது?' என்று கேட்டார்கள். அவர் இன்ன இன்ன அத்தியாயங்கள் ( எனக்கு மனப்பாடமாக) உள்ளன' என்று கூறினார். நபி(ஸல்) அவர்கள், 'உம்முடன் இருக்கும் ( குர்ஆன் அத்தியாயங்களுக்காக இவளை உமக்கு மணமுடித்து வைத்தேன்' என்று கூறினார்கள். ( புஹாரி: 5029, 5030,5087, முஸ்லிம்)

அனஸ் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் கூறினார்கள்: அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப்(ரலி) தம் மீது ( வாசனைத் திரவியத்தின்) மஞ்சள் நிற அடையாளம் இருக்க, இறைத்தூதர்(ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அப்போது ( அது குறித்து) அவர்களிடம் இறைத்தூதர்(ஸல்) அவர்கள் வினவியபோது, தாம் ஓர் அன்சாரிப் பெண்ணை மணமுடித்துக்கொண்டதாக அப்துர் ரஹ்மான்(ரலி) நபியவர்களிடம் தெரிவித்தார்கள். நபி(ஸல்) அவர்கள், 'அந்தப் பெண்ணுக்கு எவ்வளவு மஹ்ர் (விவாகக் கொடை) செலுத்தினீர்?' என்று கேட்டார்கள். அதற்கு அப்துர்

ரஹ்மான்(ரலி), 'ஒரு பேரிச்சங் கொட்டையின் எடையளவு தங்கத்தை'' என்று பதிலளித்தார்கள். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , 'ஓர் ஆட்டையாவது (அறுத்து) வலீமா-மணவிருந்து அளிப்பீராக!'' என்று கூறினார்கள். (புஹாரி: 5351, முஸ்லிம்)

அனஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: ( கைபர் போரில் கைது செய்யப்பட்ட) ஸபிய்யா பின்த் ஹுயை அவர்களை இறைத்தூதர்(ஸல்) அவர்கள் விடுதலை செய்து, தாமே அவர்களை மணமுடித்தும் கொண்டார்கள்; (ஸபிய்யா(ரலி) அவர்களின் விடுதலையையே அவர்களுக்குரிய மஹ்ராகவும் ( விவாகக் கொடையாகவும்) ஆக்கினார்கள். அ(வர்களை மணந்த)தற்காக ( விதை நீக்கப்பட்ட பேரிச்சம் பழம், பாலாடைக் கட்டி, நெய் ஆகியவற்றைக் கலந்து தயாரிக்கப்படும்) 'ஹைஸ்' எனும் பண்டத்தை வலீமா ( மணவிருந்தில் அளித்தார்கள்). (புஹாரி:947, 5169, முஸ்லிம்)

அடுத்து மஹாரென்பது பொருளாகவோ, பெறுமதியாகவோ, பயன்பாடாகவோ, கொடுக்கலாம் என்பதும் இந்த ஹதீஸ்களிலிருந்து தெளிவாகின்றது. அடுத்து அல்லாஹ் மஹருக்கு கூறும் அளவை பார்க்கும் போது அது அளவற்ற ஒரு கொடை என்பதை புரியலாம்.

நீங்கள் ஒரு மனைவி(யை விலக்கி விட்டு அவளு)க்கு பதிலாக மற்றொரு மனைவியை (மணந்து கொள்ள) நாடினால், முந்தைய மனைவிக்கு ஒரு தங்க குவியலையே கொடுத்திருந்த போதிலும், அதிலிருந்து எதையும் ( திரும்ப) எடுத்துக் கொள்ளாதீர்கள் - அபாண்டமாகவும், பகிரங்கமாகப் பாவகரமாகவும், அதனை நீங்கள் (திரும்பி) எடுக்கிறீர்களா? (4:20)

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: ஸாபித் இப்னு கைஸ் இப்னு ஷம்மாஸ்(ரலி) அவர்களின் துணைவியர் நபி(ஸல்) அவர்களிடம் வந்து, 'இறைத்தூதர் அவர்களே! ( என் கணவர்) ஸாபித் இப்னு கைஸின் குணத்தையோ, மார்க்கப் பற்றையோ நான் குறைகூறவில்லை. ஆனால், நான் இஸ்லாத்தில் இருந்துகொண்டே இறைநிராகரிப்புக்குரிய செயல்களைச் செய்து விடுவேனோ என்று அஞ்சுகிறேன்' என்று கூறினார். அப்போது, 'இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , 'ஸாபித் உனக்கு ( மணக்கொடையாக) அளித்த தோட்டத்தை நீ அவருக்கே திருப்பித் தந்துவிடுகிறாயா?' என்று கேட்டார்கள் அவர், 'ஆம் ( தந்து விடுகிறேன்)' என்று கூறினார். இறைத்தூதர்(ஸல்) அவர்கள் (ஸாபித் அவர்களிடம்), 'தோட்டத்தை ஏற்றுக் கொண்டு, அவளை ஒரு முறை தலாக் சொல்லி விடுங்கள்!' என்று கூறினார்கள். (புஹாரி 5273)

அடுத்து, மஹர் என்பது பெண்களின் வாழ்க்கைக்கு ஆதாரமாகும், கணவன் மரணித்து விட்டாலோ, அல்லது தலாக் சொல்லிவிட்டாலோ, அந்த மஹர் அவளது வாழ்க்கைக்கு துணை நிற்கப்போகின்றது, அடுத்து மனைவியின் விருப்பத்தின் பேரில் திருமணத்தை ரத்து (குல்உ) செய்வதாக இருந்தால் மஹர் திருப்பி கணவனுக்கு கொடுக்கப்பட வேண்டும். இந்த சட்டத்துக்கான

ஆதாரத்தை முன்னால் வந்த புஹாரி 5273 இலக்க ஹதீஸில் பார்க்கலாம். எனவே இந்த சட்டமானது மஹர் என்பது பாதுகாக்கப்படவேண்டிய ஒன்று என்பதையும் எடுத்துக் காட்டுகின்றது.

எனவே மஹரின் பெறுமதி அறிந்து செயற்பட நாம் முயல்வோம், அதற்கு நமக்கு அல்லாஹ் துணை புரிவானாக.

وَلَا تُؤْتُوا السُّفَهَآءَ اَمْوَالَـكُمُ الَّتِىْ جَعَلَ اللّٰهُ لَـكُمْ قِيٰمًا وَّارْزُقُوْهُمْ فِيْهَا وَاكْسُوْهُمْ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا

(அநாதைகளின் பொருளுக்கு நீங்கள் மேலாளராக ஏற்பட்டால்) அவர்கள் புத்தி குறைவானவர்களாகயிருப்பின் (வாழ்க்கைக்கு) ஆதாரமாக அல்லாஹ் உங்களிடம் ஆக்கித் தந்த செல்வத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம் - எனினும், அவர்களுக்கு அதிலிருந்து உணவளியுங்கள்; ஆடையும் அளியுங்கள்; இன்னும் அவர்களிடம் கனிவான வார்த்தைகள் கொண்டே பேசுங்கள். (4:5)

## ஐந்தாவது வசனம் தரும் படிப்பினைகள்;

((வலா துஃதுஸ் ஸுபஹாஅ அம்வாலகுமுல்லதீ ஜஅலல்லாஹு லகும் கியாமன்; உங்கள் பொறுப்பில் அல்லாஹ் ஆக்கியிருக்கும் சொத்துக்களை சுயமாக நிர்வகிக்க முடியாத அவர்ளிடம் கொடுக்க வேண்டாம்))

அனாதைகளின் சொத்துக்களை பராமரிப்பவர்களுக்கு அல்லாஹ் சொல்லும் அறிவுகளை;

அவர்களது சொத்துக்களை அவர்களாக நல்லமுறையில் பராமரிக்கும் நிலையை அடையும் வரை பொறுப்பாளிகள் அவர்களிடம் கொடுக்கக்கூடாது.

சொத்துக்களை பராமரிப்பதில் அவர்களை பல வகையினராக நோக்கலாம்; சிறுபராயம் காரணமாக இருக்கலாம், சிலநேரம் மனநிலை பாதிக்கப்பட்டிருப்பது காரணமாக இருக்கலாம், சிலவேளை முறையாக கொடுக்கல் வாங்கல் செய்யத் தெரியாமை, சிலவேளை வங்குரோத்து நிலையை அடைந்து, கடனாளிகளும் இருக்கும் நிலை இருந்தால் அதிகாரி முடக்குவதாக இருக்கலாம். ( இப்னு கஸீர்)

இப்னு அப்பாஸ், இப்னு மஸ்ஊத் (ரலி) போன்றவர்கள் சிறார்களும், பெண்களும் என்று கூறினார்கள். (இப்னு கஸீர் சுருக்கமாக)

((வர்சுகூஹும் பீஹா வக்ஸூஹும்; அதிலிருந்து அவர்களுக்கு உண்ணவும், அணியவும் கொடுங்கள்.))

அவர்கள் சொத்திலிருந்தே அவர்களுக்கு செலவீனம் செய்ய முடியும் என்பதே இந்த வசனம் கூறும் செய்தியாகும். அதேநேரம் பராமரிப்பவர் செல்வந்தராக இருப்பின் அவரது சொத்திலிருந்து தாராளமாக செலவழித்துவிட்டு, அவர்களது சொத்தை பாதுகாக்கவும் முடியும். அது அனாதைகளை பராமரித்தல் என்ற சிறப்பில் வந்துவிடும்.

((வகூலூ லஹூம் கவ்லம் மஃரூபா; நாகரீகமாக அவர்களிடம் பேசுங்கள்.))

அநாதைகளுடன் கனிவாக பேசுதல் அவசியம், அதேநேரம் பொதுவாக நல்லவிடயங்களை சொல்லிக் கொடுத்தல், குறிப்பாக பணத்தை பராமரிக்கும் விதத்தை சொல்லிக்கொடுத்தல். இந்த விடயங்களிலும் பராமரிப்போர் ஈடுபடவேண்டும் என்பது இந்த வசனம் சொல்லும் அறிவுரை.

وَابْتَلُوا الْيَتٰمٰى حَتّٰٓى اِذَا بَلَغُوا النِّكَاحَ ۚ فَاِنْ اٰنَسْتُمْ مِّنْهُمْ رُشْدًا فَادْفَعُوْٓا اِلَيْهِمْ اَمْوَالَهُمْ ۚ وَلَا تَاْكُلُوْهَآ اِسْرَافًا وَّبِدَارًا اَنْ يَّكْبَرُوْا ؕ وَمَنْ كَانَ غَنِيًّا فَلْيَسْتَعْفِفْ ۚ وَمَنْ كَانَ فَقِيْرًا فَلْيَاْكُلْ بِالْمَعْرُوْفِ ؕ فَاِذَا دَفَعْتُمْ اِلَيْهِمْ اَمْوَالَهُمْ فَاَشْهِدُوْا عَلَيْهِمْ ؕ وَكَفٰى بِاللّٰهِ حَسِيْبًا

அநாதைகளை அவர்கள் திருமண வயது அடையும் வரை (அவர்கள் முன்னேற்றம் கருதி) சோதித்துக் கொண்டிருங்கள் - (அவர்கள் மணப் பருவத்தை அடைந்ததும்) அவர்கள் (தங்கள் சொத்தை நிர்வகிக்கும் ஆற்றல்) அறிவை பெற்றுவிட்டதாக நீங்கள் அறிந்தால் அவர்களிடம் அவர்கள் சொத்தை ஒப்படைத்து விடுங்கள்; அவர்கள் பெரியவர்களாகி (தம் பொருள்களைத் திரும்பப் பெற்று) விடுவார்கள் என்று அவர்கள் சொத்தை அவசர அவசரமாகவும், வீண் விரையமாகவும் சாப்பிடாதீர்கள். இன்னும் (அவ்வநாதைகளின் பொறுப்பேற்றுக் கொண்டவர்) செல்வந்தராக இருந்தால் (அச்சொத்திலிருந்து ஊதியம் பெறுவதைத்) தவிர்த்துக் கொள்ளட்டும் - ஆனால், அவர் ஏழையாக இருந்தால் நியாயமான அளவு சாப்பிட்டுக் கொள்ளவும்; மேலும் அவர்களுடைய பொருட்களை அவர்களிடம் ஒப்படைக்கும்போது அவர்கள் மீது சாட்சிகளை ஏற்படுத்திக் கொள்ளுங்கள் - (உண்மையாகக்) கணக்கெடுப்பதில் அல்லாஹ்வே போதுமானவன். (4:6)

## ஆறாவது வசனம் தரும் படிப்பினைகள்;

அனாதைகள் சொத்துக்களை பராமரிப்போருக்கு இன்னும் சில அறிவுரைகளை இந்த வசனம் தொடர்ந்து வழங்குகிறது.

((வப்தலுள் யதாமா ஹத்தா இதா பலகுன் நிகாஹ்; அந்த அநாதைகளை அவர்கள் திருமண ( பருவ வய) தை அடையும் வரை சோதித்துக் கொண்டிருங்கள்.))

இங்கு அல்லாஹ் அவர்களது செயல்களில் குறிப்பாக சொத்துக்களை கையாளும் விதத்தில் அவர்களை கண்காணித்துக்கொண்டிருக்க வேண்டு என்று ஏவுகிறான், அப்போதுதான் அவர்கள் நிலையை சரியாக அறிந்து சொத்தை ஒப்படைக்கலாம். இப்படி அவர்கள் அவர்களது பருவ வயதை அடையும் வரை இருக்க வேண்டும், இங்கு நிக்காஹ் ( திருமண வயது) என்பதைக் கொண்டு அதுவே நாடப்பட்டுள்ளது.

பருவமடைதல் ஓர் பார்வை;

சிறுபராயத்தில் இருக்கும் ஒருவன் இளமைப் பருவத்தை அடைதல் பூப்பெய்தல் எனப்படும், அந்த கட்டத்தை ஒருவன் அடைவதே இஸ்லாத்தில் உள்ள கடமைகள் அவன் மீது கடமையாவதற்கான வயதெல்லையாகும்.

இபாதத்துகள் கடமையாகுதல்.

அஜ்னபீ மஹ்ரமி ஆண்கள் பெண்களின் சட்டங்கள் அமுலாகுதல்.

அநாதையாக இருப்பின் சொத்துக்கள் கையில் கொடுக்கப்படுதல்.

அதன் அடையாளங்களை மூன்றாக நோக்கலாம்;

இந்திரியம் வெளிப்படுதல். தூக்கத்திலோ விழிப்பிலோ முதல் தடவையாக வெளிப்படுத்தல்.

நபி ( ஸல்) அவர்கள் கூறினார்கள்: மூன்று பேரை விட்டும் எழுதுகோல் உயர்த்தப்பட்டுள்ளது; பைத்தியக்காரன் அவன் சுய நினைவு பெறும் வரை, <u>சிறுவன் அவன் பருவம் அடையும் வரை</u>, தூங்குபவன் கண் விழிக்கும் வரை. (அபூதாவூத்: 4401)

இன்னும் <u>உங்களிலுள்ள குழந்தைகள் பருவ வயதை அடைந்துவிட்டால் அவர்களும், தங்களுக்கு ( வயதில்) மூத்தவர்கள் அனுமதி கேட்பது போல் அனுமதி கேட்க வேண்டும்</u>; இவ்வாறே அல்லாஹ் தன்னுடைய வசனங்களை உங்களுக்கு விவரிக்கின்றான்; அல்லாஹ் ( யாவற்றையும்) அறிந்தவன்; ஞானம் மிக்கவன். (24:59)

ஹிஜ்ரி கணக்குப்படி பதினைந்தாவது வயதை அடைதல்.

இப்னு உமர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: உஹது யுத்த நேரம் அவர்கள் யுத்தம் செய்வதற்காக நபிகளாரிடம் எடுத்துக்காட்டப்பட்டார்கள், <u>அவர்களது வயது பதிநான்காக இருந்தது, நபியவர்கள் அனுமதி வழங்க வில்லை. கந்தக்</u>

யுத்தத்தின் போது எடுத்துக்காட்டப்படவே நபியவர்கள் அனுமதி கொடுத்தார்கள், அவர்களது வயது பதினைந்தாக இருந்தது. ( ஆதாரம்: புஹாரி:2664, முஸ்லிம்)

மருமஸ்தானத்தை சுற்றி, கமக்கட்டு பகுதியில் மயிர் முளைத்தல். இந்த விடயத்தில் கருத்துவேற்றுமை இருந்தாலும் இதுவும் அடையாளமாக இருக்கும் என்பது ஆதாரத்திற்கு உற்பட்டதே.

அதிய்யதுல் குரலி (ரலி) அவர்கள் கூறினார்கள்: குறைலா யுத்தம் முடிவடைந்த போது நாங்கள் நபிகளாரிடம் எடுத்துக் காட்டப்பட்டோம், மயிர் முளைத்திருந்தோர் கொலைசெய்யப்பட்டனர், மயிர் முளைக்காதோர் விடுவிக்கப்பட்டனர், நானும் மயிர் முளைக்காதவர்களில் ஒருவனாக இருந்து விடுவிக்கப்பட்டேன். ( ஆதாரம்: அஹ்மத்:18776, திர்மிதி:1584) (இப்னு கஸீர் சுருக்கம்)

பெண் பிள்ளையாக இருந்தால் அவர்களுக்கு முதல் தடவை மாதவிடாய் வெளிப்படுவதே அவர்கள் பருவ வயதை அடைந்துவிட்டார் என்பதற்கு அடையாளமாகும்.

(பஇன் ஆனஸ்தும் மின்ஹும் ருஷ்தன் பத்பஊ இலைஹிம் அம்வாலஹும்; (பருவ வயதை அடைந்த) அவர்களிடம் ( சொத்தை கையாள்வதில்) பொருத்தப்பாட்டை நீங்கள் கண்டால் அவர்களது செல்வத்தை அவர்களிடம் ஒப்படைத்துவிடுங்கள்))

இந்த வசனம் மூலம் அல்லாஹ், அவர்களை பருவ வயதுவரை கண்காணித்து, அவர்களிடம் சொத்துக்களை கையாளும் திறமை ( ருஷ்த்) தென்பட்டால் அவர்களிடமே ஒப்படைக்கலாம் என்ற அனுமதியைத் தருகின்றான், அத்தோடு பராமரித்தவரின் பொறுப்பும் நீங்கிவிடும்.

((வலா த:ஃகுலூஹா இஸ்ராபன் வபிதாரன் அய்யக்பரூ; அவர்கள் பெருத்து (சொத்துக்களை எடுத்து) விடுவார்கள் என்பதற்காக, அவற்றை வீணாகவும், விரைவாகவும் சாப்பிட்டு (அழித்து) விடாதீர்கள்))

பொறுப்பாளர்களுக்கு அல்லாஹ் சொல்லும் அறிவுரை; அநாதைகளாக இருக்கும் சிறார்கள் பெருத்துவிட்டால் அவர்களது சொத்தை அவர்களிடம் ஒப்படைக்க வேண்டிவரும் என்று அவர்களது சொத்தை வீணாக அழித்துவிட வேண்டாம் என்பதே. அது முன்னால் சொல்லப்பட்டது போன்று மிகப்பெரும் அநியாயமாகும்.

((வமன் கான கனிய்யன் பல் யஸ்த:ஃபிப், வமன் கான பகீரன் பல்ய:ஃகுல் பில்ம:ஃரூப்; யார் செல்வந்தராக இருக்கின்றாரோ அவர் (சொத்தை தனக்கு

பாவிப்பதில்) பேணுதல் கொள்ளட்டும், யார் ஏழையாக இருக்கின்றாரோ அவர் நியாயமான முறையில் சாப்பிட்டுக் கொள்ளட்டும்.))

அநாதைகளை பராமரிப்பவர் செல்வந்தராக இருந்தால் அநாதையின் சொத்தில் கூலிக்காகவாவது எதனையும் தன் தேவைக்கு எடுக்காமல் பேணுதலாக இருக்கட்டும், அவர் ஏழையாக இருந்தால் முறையாக சாப்பிட அனுமதியிருக்கின்றது.

ஆயிஷா ரலி அவர்கள் இந்த வசனத்திற்கு சொன்ன விளக்கத்தை பார்க்கும் போது இதனை இன்னும் பிரிந்துகொள்ளலாம். மேலும் 17 அத்தியாயம் 34 வசனமும் இதனையே தெளிவுபடுத்துகின்றது.

ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள்: 'வசதியுள்ளவர் ( அதிலிருந்து எடுத்து உண்ணாமல் தம்மைத்) தற்காத்துக் கொள்ளட்டும்; ஏழையாக இருப்பவர் (அதிலிருந்து) நியாயமான அளவு உண்ணட்டும்' என்னும் ( திருக்குர்ஆன் 04:06) இறைவசனம் அனாதையின் பராமரிப்பாளரின் விஷயத்தில், அவர் தேவையுள்ளவராக இருந்தால் அனாதையின் செல்வத்திலிருந்து, அந்த (அனாதையுடைய) செல்வத்தின் அளவிற்கேற்ப பொது வழக்கப்படி (நியாயமான முறையில்) எடுத்துக் கொள்ளும்படி ( அனுமதியளித்து) அருளப்பட்டது. (புஹாரி:2765, 4575, முஸ்லிம்)

அநாதைகள் அவர்கள் பருவ வயதை அடையும் வரை, (அவர்களை பொறுப்பேற்றிருக்கும்) நீங்கள், நியாயமான முறையிலன்றி அவர்களுடைய பொருளை நெருங்காதீர்கள், ..... (17:34)

முறையாக சாப்பிடுவது என்றால் உதாரணமாக; ஒருவரின் சாப்பாட்டு செலவுக்கு இருநூறு ரூபாய் செலவாகும் நிலையில், தன்னால் ஐம்பது ரூபா செலவழிக்க முடியம் என்றால், தனது ஐம்பது ரூபாவுடன் அவரது நூற்றி ஐம்பது ரூபாவை பயன்படுத்துவது, அதுவும் அவரது கூலிக்குள் உள்வாங்கப்பட்டதாக இருக்கவேண்டும் என்பது போன்று, ஐம்பது ரூபாய் தேவைபடும் இடத்து நூறு ரூபாய் எடுப்பது அநியாயமாகிவிடும். ( அல்லாஹு அஃலம்)

((பஇதா தபஃதும் இலைஹிம் அம்வாலஹும் பஅஷ்ஹிது அலைஹிம்; நீங்கள் அவர்களிடம் அவர்களது சொத்துக்களை ஒப்படைத்தால் அவர்கள் மீது சாட்சிவைத்துக்கொள்ளுங்கள்.))

ஒரு அநாதை வயதுக்கு வந்து, சொத்துக்களை பராமரிக்கும் அனுபவம் உள்ளவராகவும் இருக்கும் நிலையில் பொறுப்பாளி சொத்தை ஒப்படைக்கும் போது அதற்கான சாட்சிகளை வைத்துக் கொள்வது அவசியமானது, மனிதன் மனிதனை நம்பாமலிருக்கும் நிலை ஏற்படும் என்பதனால் இப்படி சாட்சி வைக்கும் இந்த அழகான வழிக்காட்டலை அல்லாஹ் கட்டளையாக

இடுகின்றன. இப்படி அழகான நடைமுறைகளை எடுத்துக்கூறிய அல்லாஹ் இந்த வசனத்தை முடிக்கும் விதம் அற்புதமானது. அல்லாஹ் கூறுகின்றான்:

((வகபா பில்லாஹி ஹஸீபா; விசாரிப்பதில், கணக்கெடுப்பதில் அல்லாஹ் போதுமானவன்))

இங்கு அல்லாஹ் சொல்லவரும் அறிவுரை; அநாதைகளை பராமரிப்பதிலும், சொத்துக்களை கையாள்வதில், அதனை ஒப்படைப்பதிலும் இன்னும் சொல்லப்பட்ட ஒழுக்கங்களை கடைப்பிடிப்பதிலும் மனிதர்கள் முறையாக நடக்கின்றார்களா, இல்லையா என்பதை உலக வாழ்வில் கவனித்து, மறுமையில் விசாரிப்பதில் வல்லவன் என்பதே! உண்மையில் இந்த உலகில் வாழும் மனிதன் நல்லவனாக வாழவேண்டுமா; தன்னை கண்காணிக்க, விசாரிக்க ஒரு இறைவன் அல்லாஹ் இருக்கிறான் என்ற உணர்வே அவனை நல்லவனாக வாழச் செய்யும் அதனால்தான் அந்த எச்சரிக்கையோடு அல்லாஹ் இந்த வசனத்தை முடிக்கின்றான்.

அல்லாஹ்வின் தூதர் அபூதர் (ரலி) அவர்களுக்கு செய்த அறிவுரை நமக்கு பாடமாக இருக்கட்டும்;

அபூதர் (ரலி) அவர்கள் கூறியதாவது: அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்கள் (என்னிடம்), "அபூதர்! உம்மை நான் பலவீனமானவராகவே காண்கிறேன். எனக்கு நான் விரும்புவதையே உமக்கும் விரும்புகிறேன். இருவருக்குக்கூட நீர் தலைமை ஏற்காதீர். அநாதையின் சொத்துக்கு நீர் பொறுப்பேற்காதீர்" என்று சொன்னார்கள். ((முஸ்லிம்: 3730)

لِلرِّجَالِ نَصِيْبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدٰنِ وَالْاَقْرَبُوْنَ وَلِلنِّسَآءِ نَصِيْبٌ مِّمَّا تَرَكَ الْوَالِدٰنِ
وَالْاَقْرَبُوْنَ مِمَّا قَلَّ مِنْهُ اَوْ كَثُرَ‌ نَصِيْبًا مَّفْرُوْضًا

பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில் ஆண்களுக்கு பங்குண்டு; அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பங்குண்டு - (சொத்து) குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே; (இது அல்லாஹ்வினால்) விதிக்கப்பட்ட பாகமாகும். (4:7)

## ஏழாவது வசனம் தரும் படிப்பினைகள்;

((லிர்ரிஜாலி நஸீபும் மிம்மா தரகள் வாலிதானி வல் அக்ரபூன், வலின்நிஸாஇ நஸீபுன் ; பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில்

ஆண்களுக்கு பங்குண்டு; அவ்வாறே பெற்றோரோ, நெருங்கிய உறவினரோ விட்டுச் சென்ற (சொத்)தில் பெண்களுக்கும் பங்குண்டு .))

மரணித்தவரின் சொத்தில் ஆண்கள், பெண்கள் இரு சாராருக்கும் சொத்துரிமை உண்டு, பங்குகள், அளவு வித்தியாசமாகலாம், ஆனால் சொத்துரிமை இருக்கிறது என்பது முதல். அன்று ஜாஹிலிய்ய கால சமூகம் ஆண்களுக்கு மாத்திரம் சொத்தைக் கொடுத்தது, பெண்கள், சிறார்களுக்கு முறையாக சொத்தை சேர்க்கவில்லை, இஸ்லாம் அதற்கு மாறாக சம உரிமை சொத்தில் வழங்கியது. என்று சஈத் பின் ஜுபைர், கதாத போன்ற அறிஞர்கள் கூறினார்கள். ( இப்னு கஸீர் சுருக்கம்)

((மிம்மா தரகள் வாலிதானி வல் அக்ரபூன்; பெற்றோரோ, நெருங்கிய உறவினர்களோ விட்டுச் சென்ற (சொத்)தில்))

மரணித்தவர் பெற்றோராக இருக்கலாம், அல்லது கணவன், மனைவி என்ற உறவாக இருக்கலாம் எப்படியிருந்தாலும் பங்கு சேர வேண்டும் என்பது ஒரு கட்டளை .

((மிம்மா கல்ல மின்ஹு அவ்கஸுர் ; குறைவாக இருந்தாலும் சரி, அதிகமாக இருந்தாலும் சரியே))

அடுத்து விட்டுச்சென்ற சொத்து குறைவாகவோ அதிகமாகவோ இருக்கலாம் அல்லாஹ் சொல்வதுபோன்று பிரிக்கப்பட வேண்டும் என்பது ஒரு கட்டளை.

((நஸீபம் மப்ரூளா; கட்டாயமாக விதிக்கப்பட்ட பாகமாக (இருக்கின்றது).))

அதுவும் தானாக விரும்பினால் செய்வதல்ல, கட்டாயமாக இதனை நிறைவேற்ற வேண்டும் என்பது ஒரு கட்டளை.

எனவே பெற்றோர் பாதுகாவலர் விரும்பினால், விரும்பியவாறு, விரும்பியவருக்கு கொடுக்கலாம் என்பதல்ல, மாறாக கட்டாயம் சொத்து உரிமையுள்ள ஆண்கள், பெண்கள் இருசாராருக்கும், அல்லாஹ் விதித்த அளவு (பின்னால் வருவது போன்று ) கொடுக்கப்பட வேண்டும் என்பது இந்த வசனத்தின் தெளிவான வேண்டுகோள்!

ஆனால் இன்றையமுஸ்லிம் சமூகத்தின் நிலையை பொறுத்தவரை, பெண்களுக்குரிய சரியான சொத்துரிமையை கொடுப்பதுமில்லை, ஆண்களுக்கு கொடுப்பதுமில்லை,

சில குடும்பங்களை எடுத்துக் கொண்டால் (பெண்களுக்கு திருமணத்தின் போது கொடுத்து விட்டோம் என்ற நினைப்பில், பெற்றோரின் மரணத்தின் பின்) ஆண் பிள்ளைகளுக்கு அனைத்து சொத்தும் பகிர்ந்தளிக்கப்படுகின்றது, அதிகமான குடும்பங்களின் நிலை ( சீதனம் என்ற போர்வையில் மரணத்திற்கு முன்பே)

பெண்களுக்கு அனைத்தையும் கொடுத்து விடுகின்றது, கணவன் மரணித்து விட்டால் மனைவிக்கு சொத்தில்லை, பெற்றோர்களும், சகோதரர்களும் சூறையாடும் நிலை, அப்படியே பெண் பிள்ளைகளுக்கு சொத்து கிடைத்தாலும், சொத்தை பாதுகாக்கவேண்டிய கணவன்மார்கள் பலவந்தமாக அதனை அழித்துவிடும் காட்சியே அதிகம். இதற்கெல்லாம் காரணம், இஸ்லாம் வழங்கியிருக்கும் சொத்துரிமையை முஸ்லிம்கள் படிக்கவில்லை என்பதே.

இதே சூராவின் 32 வது வசனத்தை பார்க்கும் போது அடுத்தவர்கள் சொத்தை ஆசாவைப்பது நல்லதல்ல என்பதை புரிந்துகொள்ளலாம்.

மேலும் எதன் மூலம் உங்களில் சிலரை வேறு சிலரைவிட அல்லாஹ் மேன்மையாக்கியிருக்கின்றானோ, அதனை ( அடையவேண்டுமென்று) பேராசை கொள்ளாதீர்கள்; ஆண்களுக்கு, அவர்கள் சம்பாதித்த(வற்றில் உரிய) பங்குண்டு; (அவ்வாறே) பெண்களுக்கும், அவர்கள் சம்பாதித்(வற்றில் உரிய) பங்குண்டு; எனவே அல்லாஹ்விடம் அவன் அருளைக் கேளுங்கள்; நிச்சயமாக அல்லாஹ் எல்லாப் பொருட்களையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (4:32)

ஆனால் இன்றைய குடும்ப சூழ்நிலை, மனைவியின் சொத்தை அளிக்கும் கணவனும், கணவனின் சொத்தை தன் சொத்தாக கையாளும் மனைவிமாருமே இருக்கின்றனர். ஆனால் சொத்து விடயத்தில் நபித்தோழர்கள் மிகவும் தெளிவாக இருந்தார்கள் என்பதை ஹதீஸ்களில் பார்க்கலாம், அல்லாஹ் எமக்கும் அந்த தெளிவைத் தருவானாக!

ஆயிஷா(ரலி) அவர்கள் கூறினார்கள்: முஆவியா(ரலி) அவர்களின் தயார் ஹிந்த்(ரலி), நபி(ஸல்) அவர்களிடம், '(என் கணவர்) அபூ சுப்யான் கஞ்சராக இருக்கிறார்; அவரின் பொருளை அவருக்குத் தெரியாமல் நான் எடுத்தால் என் மீது அது குற்றமாகுமா?' எனக் கேட்டார்கள். அதற்கு, 'உனக்குப் போதுமானதை நியாயமான முறையில் நீயும் உன் மக்களும் எடுத்துக் கொள்ளுங்கள்!' என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள். (புஹாரி; 2211, முஸ்லிம்)

அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) உடைய மனைவி ஸைனப்(ரலி) அவர்கள் கூறினார்கள்: நான் பள்ளிவாயிலில் இருந்தபோது நபி(ஸல்) அவர்கள், 'பெண்களே! உங்களின் ஆபரணங்களிலிருந்தேனும் தர்மம் செய்யுங்கள்' எனக் கூறினார்கள். நான் என் ( கணவர்) அப்துல்லாஹ்(ரலி)வுக்கும் மற்றும் என் அரவணைப்பிலுள்ள அனாதைகளுக்கும் செலவழிப்பவளாக இருந்தேன். எனவே என் கணவரிடம், நான் உங்களுக்காகவும் என்னுடைய அரவணைப்பில் வளரும் அனாதைகளுக்காகவும் என்னுடைய பொருளைச் செலவழிப்பது ஸதாகாவாகுமா என்று நபி(ஸல்) அவர்களிடம் கேட்டு வாருங்கள் எனக் கூறினேன். அப்துல்லாஹ்(ரலி) அல்லாஹ்வின் தூதரிடம் நீயே கேள் எனக் கூறிவிட்டார். எனவே நான் நபி(ஸல்) அவர்கள் சென்றேன். அவர்கள் வீட்டுவாயிலில் ஓர் அன்ஸாரிப் பெண் இருந்தார். அவரின் நோக்கமும்

என்னுடைய நோக்கமாகவே இருந்தது. அப்போது எங்களிடையே பிலால்(ரலி) வந்தார். அவரிடம் நான் என்னுடைய கணவருக்கும் என்னுடைய பராமரிப்பிலுள்ள அனாதைகளுக்கும் நான் செலவழிப்பது தர்மமாகுமா? என்று நபி(ஸல்) அவர்களிடம் கேளுங்கள்; நாங்கள் யார் என்பதைத் தெரிவிக்கவேண்டாம் எனக் கூறினோம். உடனே அவர் நபி(ஸல்) அவர்களிடம் சென்று கேட்டபோது நபி(ஸல்) அவர்கள், 'அவ்விருவரும் யார்? எனக் கேட்டதற்கு அவர் 'ஸைனப்' எனக் கூறினார். நபி(ஸல்) அவர்கள் 'எந்த ஸைனப்?' எனக் கேட்டதும் பிலால்(ரலி), 'அப்துல்லாஹ்வின் மனைவி' எனக் கூறினார். உடனே நபி(ஸல்) 'ஆம்! ஸைனபுக்கு இரண்டு நன்மைகளுண்டு. ஒன்று நெருங்கிய உறவினரை அரவணைத்ததிற்குரியது; மற்றொன்று தர்மத்திற்குரியது' எனக் கூறினார்கள். ( புஹாரி:1466 , முஸ்லிமின்:1824 அறிவிப்பில்; "இப்னு மஸ்ஊதே நீங்களோ வசதி அற்றவராக இருக்கின்றீர் , அல்லாஹ்வின் தூதர் தானம் செய்ய சொல்கின்றார்கள் , நபிகளாரிடம் கேளுங்கள், உங்களுக்கு நான் தந்தால் ஸதகாவாக சேருமா என்று , இல்லையென்றால் வேறுயாருக்கும் கொடுத்துவிடுவேன். என்று கூறியதாக வந்துள்ளது.

وَاِذَا حَضَرَ الْقِسْمَةَ اُولُوا الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنُ فَارْزُقُوْهُمْ مِّنْهُ وَقُوْلُوْا لَهُمْ قَوْلًا مَّعْرُوْفًا

பாகப்பிரிவினை செய்யும் போது (பாகத்திற்கு உரிமையில்லா) உறவினர்களோ, அநாதைகளோ, ஏழைகளோ வந்து விடுவார்களானால் அவர்களுக்கும் அ(ச்சொத்)திலிருந்து உண்ண கொடுங்கள்; மேலும் அவர்களிடம் நாகரீகமான வார்த்தை கொண்டே பேசுங்கள். (4:8)

## எட்டாவது வசனம் தரும் படிப்பினைகள்;

அனந்தர சொத்தை பங்கு வைக்கும் நேரம் அனந்தரக்காரர்கள் அல்லாத வேறு குடும்ப உறவுகள், அல்லது ஏழைகளை அழைக்கலாம் என்றும், அப்படி அவர்கள் அங்கு வந்திருந்தால் அவர்களையும் அனந்தர சொத்திலிருந்து உண்ண கொடுத்து கவனிப்பதும், அவர்களோடு நாகரீகமான முறையில் பேசுவதும் இந்த வசனம் மூலம் வலியுறுத்தப்பட்டுள்ளது.

பொதுவாக இஸ்லாம் ஏழைகளை அறுவடைகளின் போது கலந்துகொள்ள செய்வதையும், அவர்களையும் கவனித்துக் கொள்வதையும் வலியுறுத்தியுள்ளது. விவசாய அறுவடையின்போது ஏழைகளை புறக்கணிப்பது அல்லாஹ்வின் சோதனை ஏற்படும் அளவு குற்றம் என்றும் அல்குர்ஆன் குறிப்பிடுகின்றது.

......(இது அறியாது) காலையில் எழுந்த அவர்கள் ஒருவரை ஒருவர் அழைத்தனர்.68:22. “நீங்கள் (விளைந்த) கனிகளைக் கொய்பவர்களாக இருந்தால் உங்கள் தோட்டத்திற்கு அதிகாலையில் செல்லுங்கள்” (என்று கூறிக் கொண்டனர்).68:23. எனவே அவர்கள் ( பிறர் அறியாது) மெதுவாகப் பேசிக் கொண்டு சென்றனர்;68:24. “எந்த ஏழை எளியவரும் இன்று உங்களிடம் அ(த் தோட்டத்)தில் நிச்சயமாக பிரவேசிக்கக் கூடாது” (என்று).68:25. உறுதியுடன் சக்தியுடையவர்களாக காலையில் சென்றனர்.68:26. ஆனால், அவர்கள் அதை (தோட்டத்தை அழிந்து போன நிலையில்) கண்ட போது: “நிச்சயமாக நாம் வழி தவறி (வேறு தோட்டத்திற்கு) வந்து விட்டோம்” என்று கூறினார்கள். (68:21-26)

பந்தல்களில் படரவிடப்பட்ட கொடிகளும், படரவிடப்படாத செடிகளும், பேரீத்த மரங்களும் உள்ள சோலைகளையும், புசிக்கத்தக்க விதவிதமான காய், கறி, தானியங்களையும், ஒன்றுபோலும் வெவ்வேறாகவும் தோற்றமளிக்கும் ஜைத்தூன் (ஒலிவம்) மாதுளை ஆகியவற்றையும், அவனே படைத்தான். ஆகவே அவை பலனளித்தால் அவற்றின் பலனிலிருந்து புசியுங்கள். அவற்றை அறுவடை செய்யும் காலத்தில் அதற்குரிய (கடமையான) பாகத்தைக் கொடுத்து விடுங்கள். வீண் விரயம் செய்யாதீர்கள்- நிச்சயமாக அவன் (அல்லாஹ்) வீண் விரயம் செய்பவர்களை நேசிப்பதில்லை. (6:141)

இந்த வசனத்தை முடிக்கும் முகமாக, அவர்களோடு நாகரீகமாக பேசுங்கள் என்று அல்லாஹ் கூறுவதிலிருந்து, நல்ல வார்த்தைகளை நாகரீகமான வார்த்தைகளை பேசுவதன் மூலம் அவர்களது உள்ளங்களில் போட்டி பொறாமை குரோதம், வராமலிருக்க நல்ல வழிகாட்டலாகும்.

இன்றைய உலகில் சொத்து உள்ளவர்கள் ஏழைகளை புறக்கணித்து வாழவதே எல்லாப் பிரச்சனைகளுக்கும் காரணமாகும், இந்த வர்க்க போராட்டத்தை ஒழிப்பதற்கே இஸ்லாத்தின் இந்த வழிகாட்டல். (அல்லாஹு அஃலம்)

அடுத்து, இந்த வசனம் சட்டம் மாற்றப்பட்ட (மன்ஸூகான) தா என்ற கருத்து வேற்றுமையும் இருக்கின்றது.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் இது மாற்றப்படவில்லை என்று கூறுகின்றார்கள்.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: பாகப்பிரிவினை செய்துகொள்ளும்போது உறவினர்கள், அநாதைகள், ஏழைகள் ஆகியோர் வந்துவிட்டால் அவர்களுக்கும் அதிலிருந்து உணவு அளியுங்கள். மேலும், அவர்களிடம் கனிவான வார்த்தைகளை பேசுங்கள்' எனும் (திருக்குர்ஆன் 04:8 வது) வசனம், (சட்டம்) நடை முறையிலுள்ள வசனமாகும்; சட்டம் மாற்றப்பட்ட வசனமன்று. (புஹாரி: 4576)

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்கள் சிலர், 'இந்த (திருக்குர்ஆன் 04:08) இறைவசனம் (கூறும் சட்டம்) மாற்றப்பட்டுவிட்டது' என்று கருதுகிறார்கள். இல்லை அல்லாஹ்வின் மீதாணையாக! இது மாற்றப்படவில்லை. ஆனால், மக்கள் இதை இலேசாகக் கருதி ( செயல்படுத்தாமல்விட்டு)விட்டார்கள். காப்பாளர்கள் இரண்டு வகைப்படுவர். ஒரு வகையினர் ( இறப்பவரின்) காப்பாளராவார். இவர் வாரிசாவார். இந்த (இரத்த பந்தமுள்ள) காப்பாளர் தான் (தூரத்து உறவினர்களுக்கும், அனாதைகளுக்கும், ஏழைகளுக்கும்) கொடுப்பார். மற்றொரு காப்பாளர், இவர் வாரிசாக மாட்டார். ( உதாரணமாக, அனாதைகளின் காப்பாளர்.) இவர்தான், (சொத்தைப் பங்கிடும்போது தமக்கும் ஏதாவது கிடைக்கும் என்று எதிர்பார்த்து நிற்கும் ஏழை எளியவர்களுக்கும், அனாதைகளுக்கும்) நல்ல முறையில் ( இன்சொல் பேசி அன்புடன்), 'நான் உனக்கு எதுவும் தர என்னிடம் இல்லை' என்று கூறி விடுவார். (புஹாரி: 2759)

இதே கருத்து இப்னு மஸ்ஊத், அபூ மூஸா, அப்துர் ரஹ்மான் பின் அபீபக்ர் (ரலி) போன்ற நாபித் தோழர்கள் வாயிலாகவும் பதியப்பட்டுள்ளது (இப்னு கஸீர்)

அதேநேரம், இப்னு அப்பாஸ் ( ரலி) அவர்களே இது மாற்றப்பட்டது என்று கூறியதாக பதியப்பட்டுள்ளது, இந்த சட்டம் பின்னால் வரும் "யூஸீக்குமுல்லாஹு" என்ற வசனம் மூலம் மாற்றப்பட்டது, இந்த கருத்தையே நான்கு மத்ஹபின் இமாம்களும் ஏற்றுள்ளனர், (இப்னு கஸீர்)

ஆதாரத்தின் அடிப்படையில் மாற்றப்படவில்லை என்பது பலமாக தென்படுகின்றது. (அல்லாஹு அ:லம்)

وَلْيَخْشَ الَّذِيْنَ لَوْ تَرَكُوْا مِنْ خَلْفِهِمْ ذُرِّيَّةً ضِعٰفًا خَافُوْا عَلَيْهِمْ فَلْيَتَّقُوا اللّٰهَ وَلْيَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا

தங்களுக்கு பின்னால் பலஹீனமான சந்ததிகளை விட்டுச் சென்றால் (அவர்களுடைய நிலை என்னவாகும் என்று) அஞ்சுகிறார்களோ அவர்கள் பயந்து (முன் ஜாக்கிரதை நடவடிக்கைகளை எடுத்துக்) கொள்ளட்டும்; மேலும் அல்லாஹ்வை அஞ்சி, இதமான வார்த்தைகளையே அவர்கள் சொல்லட்டும். (4:9)

## ஒன்பதாவது வசனம் தரும் படிப்பினைகள்;

இந்த வசனத்திற்கு விளக்கம் சொன்ன இப்னு அபபாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: "இந்த வசனம் மரணத்தருவாயில் இருக்கும் ஒரு மனிதர் விடயத்திலாகும் , அவர் ஒரு வஸிய்யத் செய்கின்றார் , அந்த வஸிய்யத் அனந்தரக்காரர்களை பாதிக்க செய்யும் வஸிய்யத்தாக இருக்கின்றது, இதனை ஒரு மனிதர் அறிந்துவிடுகின்றார் என்றால் , அந்த மனிதனுக்கு அல்லாஹ் இடும் கட்டளை , அல்லாஹ்வை பயந்து கொள்ளுமாறும் , மரணத்தருவாயில்

இருப்பவருக்கு நல்லுபதேசம் செய்யுமாறும் , தன் அனந்தரக்காரர்கள் பாதிக்கப்படுவதை பயந்தால் என்ன செய்வாரோ அப்படி செய்யட்டும் என்றே கூறுகின்றது" இப்படியே முஜாஹித் இன்னும் பலரும் கூறியுள்ளார்கள். (இப்னு கஸீர்)

எனவே இன்று அனந்தரக்காரர்களின் சொத்துக்கள் அதிகம் துஷ்பிரயோகம் செய்யப்படும் காலத்தில் உலக மக்களினதும் , சமூகத் தலைவர்களினதும் கடமைகளை எடுத்துக் கூறி , எச்சரிக்கை செய்து , அந்தச் சொத்தை பாழ்படுத்தும் சமூகத்தை திருத்துவதே இந்த வசனத்தின் நோக்கம்.

எனவே இந்த வசனம் மரணித்தவர் விட்டுச் செல்லும் சொத்தை அதிகம் பாழ்படுத்தும் இன்றைய முஸ்லிம்களை நோக்கி, அதிகம் எடுத்து சொல்லப்பட வேண்டும். பின்னால் பதியப்படும் புகாரியின் 1295 , 2742 இலக்க ஹதீஸை வாசித்துப் பாருங்கள் நபிகளார் காலத்தில் நபியவர்கள் எப்படி நடந்து கொண்டார்கள் என்பது புரியும். அல்லாஹ்வே நமக்கு தெளிவைத்த தரப்போதுமானவன்!

இதற்கு ஆதாரமாக பின்வரும் ஹதீஸை பார்க்கலாம்.

ஸஃத் இப்னு அபீ வக்காஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: 'இறைத்தூதர் அவர்களே! என் செல்வம் முழுவதையும் நான் மரணசாசனம் செய்து விடட்டுமா?' என்று கேட்டேன். அவர்கள், 'வேண்டாம்' என்று கூறினார்கள். நான், 'அப்படியென்றால் பாதியை மரண சாசனம் செய்து விடட்டுமா?' என்று கேட்டேன். அதற்கும், 'வேண்டாம்' என்றே பதிலளித்தார்கள். நான், 'மூன்றிலொரு பங்கை?' என்று கேட்டேன். அவர்கள், 'மூன்றிலொரு பங்கா? மூன்றிலொரு பங்கே அதிகம் தான். நீங்கள் உங்கள் வாரிசுகளைத் தன்னிறைவுடையவர்களாகவிட்டுச் செல்வது, அவர்களை மக்களிடம் கையேந்தும்படி ஏழைகளாகவிட்டுச் செல்வதை விட நல்லதாகும்.' என்று கூறினார்கள். .. (புஹாரி: 1295, 2742, முஸ்லிம்)

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: மக்கள் (தம் மரண சாசனங்களை) நான்கிலொரு பாகமாகக் குறைத்துக் கொண்டால் நன்றாயிருக்கும். ஏனெனில், இறைத்தூதர்(ஸல்) அவர்கள், 'மூன்றிலொரு பங்கா? மூன்றிலொரு பங்கும் அதிகம் தான்' என்று கூறினார்கள். (புஹாரி: 2743, முஸ்லீம்)

இன்னும் சிலர் இந்த வசனத்திற்கு பின்வருமாறு விளக்கம் சொன்னார்கள் ; "வராசத்துக்காரர்கள் (அனாதைகள்) ஒருவருக்கு பின்னால் விடப்படுகின்றார்கள் என்றால் அந்த பொறுப்பாளிகள் சொத்துக்களை கையாள்வதில் அல்லாஹ்வை பயப்பட வேண்டும் , அதனை வீணாக , விரைவாக சாப்பிட்டு முடித்துவிடக்கூடாது." “இந்த விளக்கமும் நன்றாகவே இருக்கின்றது , அதனை பின்னால் வரும் வசனமும் அனாதைகள் சொத்தை சாப்பிடுவதை கண்டிக்கிறது

என்பதனால் பலமடைகின்றது. என்றால் உங்கள் மரணத்துக்கு பின்னால் உங்கள் அனந்தர்க்காரர்கள் எப்படி கையாளப்படவேண்டும் என்று நீங்கள் விரும்புவீர்களோ,அப்படி அடுத்தவர்களுடன் அனந்தரக்காரர்கள் விடயத்தில் பொறுப்பு சாட்டப்பட்டால் நடப்பீராக" (இப்னு கஸீர்)

إِنَّ الَّذِيْنَ يَأْكُلُوْنَ أَمْوَالَ الْيَتٰمٰى ظُلْمًا إِنَّمَا يَأْكُلُوْنَ فِىْ بُطُوْنِهِمْ نَارًا ؕ وَسَيَصْلَوْنَ سَعِيْرًا

நிச்சயமாக, யார் அநாதைகளின் சொத்துக்களை அநியாயமாக விழுங்குகிறார்களோ அவர்கள் தங்கள் வயிறுகளில் விழுங்குவதெல்லாம் நெருப்பைத்தான் - இன்னும் அவர்கள் (மறுமையில்) கொழுந்து விட்டெறியும் (நரக) நெருப்பிலேயே புகுவார்கள். (4:10)

## பத்தாவது வசனம் தரும் படிப்பினைகள்;

4:6 வது வசனத்தில் சொல்லப்பட்டது போன்று காரணமின்றி அனாதைகளின் சொத்துக்களை சாப்பிடுவது பெரும் பாவமாகும் , இதனை செய்பவர்கள் மறுமையில் நரகையே அடைவார்கள் , என்பது இந்த வசனம் விடும் எச்சரிக்கையாகும். அதே நேரம் உலகில் அழிவுகளும் ஏற்படலாம்.

அபூ ஹுரைரா(ரலி) அவர்கள் கூறினார்கள்: 'அழித்தொழிக்கும் ஏழு பெரும் பாவங்களைத் தவிருங்கள் ' என்று இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள். மக்கள், 'இறைத்தூதர் அவர்களே! அவை எவை ?' என்று கேட்டார்கள். நபி(ஸல்) அவர்கள், 'அல்லாஹ்வுக்கு இணை கற்பிப்பதும் , சூனியம் செய்வதும் , நியாயமின்றி கொல்லக் கூடாது என்று அல்லாஹ் புனிதப்படுத்தியுள்ள உயிரைக் கொல்வதும் , வட்டி உண்பதும் , அனாதைகளின் செல்வத்தை உண்பதும், போரின்போது புறமுதுகிட்டு ஓடுவதும் அப்பாவிகளான , இறைநம்பிக்கை கொண்ட , கற்புள்ள பெண்களின் மீது அவதூறு கூறுவதும் தான் (அந்தப் பெரும் பாவங்கள்) ' என்று (பதில்) கூறினார்கள். (புஹாரி:2766, முஸ்லிம்)

يُوْصِيْكُمُ اللّٰهُ فِىْۤ اَوْلَادِكُمْ لِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ ۚ فَاِنْ كُنَّ نِسَآءً فَوْقَ اثْنَتَيْنِ فَلَهُنَّ ثُلُثَا مَا تَرَكَ ۚ وَاِنْ كَانَتْ وَاحِدَةً فَلَهَا النِّصْفُ ؕ وَلِاَبَوَيْهِ لِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ مِمَّا تَرَكَ اِنْ كَانَ لَهٗ وَلَدٌ ۚ فَاِنْ لَّمْ يَكُنْ لَّهٗ وَلَدٌ وَّوَرِثَهٗۤ اَبَوٰهُ فَلِاُمِّهِ الثُّلُثُ ؕ فَاِنْ كَانَ لَهٗۤ اِخْوَةٌ فَلِاُمِّهِ السُّدُسُ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصِىْ بِهَاۤ اَوْ دَيْنٍ ؕ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ ۚ لَا تَدْرُوْنَ اَيُّهُمْ اَقْرَبُ لَـكُمْ نَفْعًا ؕ فَرِيْضَةً مِّنَ اللّٰهِ ؕ اِنَّ اللّٰهَ كَانَ عَلِيْمًا حَكِيْمًا

உங்கள் மக்களில் ஓர் ஆணுக்கு இரண்டு பெண்களுக்குக் கிடைக்கும் பங்குபோன்றது கிடைக்கும் என்று அல்லாஹ் உங்களுக்கு உபதேசிக்கின்றான்;

பெண்கள் மட்டும் இருந்து அவர்கள் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்டிருந்தால் அவர்களுக்கு இறந்து போனவர்விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு பாகம் கிடைக்கும். ஆனால் ஒரே பெண்ணாக இருந்தால் அவள் பங்கு பாதியாகும்; இறந்தவருக்கு குழந்தை இருக்குமானால் இறந்தவர் விட்டுச் சென்றதில் ஆறில் ஒரு பாகம் (அவரது) பெற்றோர் ஒவ்வொருவருக்கும் உண்டு. ஆனால் இறந்தவருக்கு குழந்தை இல்லாதிருந்து பெற்றோர் மாத்திரமே வாரிசாக இருந்தால் அவர் தாய்க்கு மூன்றில் ஒரு பாகம் (மீதி தந்தைக்கு உரியதாகும்); இறந்தவருக்கு சகோதரர்கள் இருந்தால் அவர் தாய்க்கு ஆறில் ஒரு பாகம் தான் (மீதி தந்தைக்கு சேரும்). இவ்வாறு பிரித்துக் கொடுப்பது அவர் செய்துள்ள மரண சாஸனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான்; உங்கள் பெற்றோர்களும், குழந்தைகளும் - இவர்களில் யார் நன்மை பயப்பதில் உங்களுக்கு நெருக்கமாக இருப்பவர்கள் என்று நீங்கள் அறிய மாட்டீர்கள்; ஆகையினால் (இந்த பாகப்பிரிவினை) அல்லாஹ்விடமிருந்து வந்த கட்டளையாகும்; நிச்சயமாக அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும் மிக்க ஞானமுடையவனாகவும் இருக்கின்றான். (4:11)

இந்த சூராவின் பதினொன்று , பன்னிரண்டாவது வசனங்களும் , கடைசி வசனமும் அனந்தர சொத்தின் சட்டத்தை குறிப்பிட்டு சொல்லும் வசனங்களாகும், அது பற்றிய சட்டங்கள் சம்பந்தமாக தனி புத்தகங்கள் தொகுக்கப்பட்டிருக்கின்றன, எனவே இந்த வசனங்களின் சுருக்கத்தை இங்கு நோக்குவோம்!

வராசத் சட்டங்களை படிப்பது சம்பந்தமாக சில செய்திகள் பதியப்பட்டுள்ளன அவைகள் பெரும்பாலும் பலவீனமானவையே.

அறிவு என்பது மூன்று வகையாகும் , அதனைத் தவிர உள்ளவை மேல் மிச்சமாகும்; தெளிவான சட்டம் சொல்லும் வசனம் , நிலையான சுன்னா , கடமையான அனந்தரம் பற்றியது. என நபி (ஸல்) அவர்கள் கூறினார்கள். (அபூ தாவூத்:2885, இப்னு மாஜாஹ்:54) அப்துர் ரஹ்மான் அல்அப்ரீகி வழியாக பதியப்பட்டுள்ளது இவர் பலவீனமானவராவார். எனவே இந்த செய்தி பலவீனமானதே.

அபூ ஹுரைராவே , நீங்கள் வராசத் அறிவை தேடுங்கள் , அதனை கற்றுக் கொடுங்கள், ஏனெனில் அது அறிவில் அரைவாசியாகும் , அது மறக்கடிக்கப்படும், அதுவே எனது உம்மத்திலிருந்து முதலாவது பறிக்கப்படும். என்று நபியவர்கள் கூறினார்கள். (இப்னு மாஜாஹ்: 2719 தாரகுத்னீ இன்னும் பல) ஹப்ஸ் பின் அம்ர் பின் அபில் அதாப் வழியாக பதியப்பட்டுள்ளது , அவர் பலவீனமானவர், எனவே இந்த ஹதீஸ் பலவீனமானதாகும்.

"வராசத் அறிவைக் கற்றுக் கொள்ளுங்கள் , ஏனெனில் நான் மரணிக்கும் மனிதனாக இருக்கிறேன்" என்று நபியவர்கள் கூறினார்கள். (ஹாகிம்: 7950,7951)

அதில் சுலைமான் பின் ஜாபிர் அல்ஹஜரீ என்ற மஜ்ஹூல் இடம் பெற்றுள்ளார். இதுவும் பலவீனமானதாகும்.

அல்குர்ஆனால் தெளிவாக கூறப்பட்ட சட்டம் வராசத் சட்டம் என்ற அடிப்படையில் இதனை கற்பதன் அவசியத்தை உணரலாம் , குர்ஆனை கற்பவன் இதனை கற்றே ஆகவேண்டும் என்பது இதன் சிறப்பை எடுத்துக் காட்டுகின்றது. ஆனால் இதுவே முஸ்லிம்களால் அதிகம் புறக்கணிக்கப்பட்ட ஒரு சட்டமாக இருப்பது கவலைக்குரியதே.

இந்த வசனங்கள் இறங்குவதற்கு காரணிகளாக (ஸபாபுன் னுசூல்) இருந்த நிகழ்வு;

ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: நபி(ஸல்) அவர்களும் அபூ பக்ர்(ரலி) அவர்களும் பனூசலிமா குலத்தாரிடையே நான் (நோயுற்றுத் தங்கி) இருந்தபோது நடந்தே வந்து என்னை நலம் விசாரித்தார்கள். நபி(ஸல்) அவர்கள் நான் (நோயின் கடுமையால்) சுயநினைவு இழந்தவனாக இருந்த நிலையில் என்னைக் கண்டார்கள். எனவே , சிறிது தண்ணீரைக் கொண்டுவரச் சொல்லி அதிலிருந்து உளூ (அங்கசுத்தி) செய்து என் மீது தெளித்தார்கள். நான் மூர்ச்சை தெளிந்து , 'இறைத்தூதர் அவர்களே! நான் என் செல்வத்தை என்ன செய்யவேண்டுமென்று எனக்குக் கட்டளையிடுகிறீர்கள்! ' என்று கேட்டேன். அப்போதுதான் 'அல்லாஹ் உங்கள் பிள்ளைகளுடைய (பாகப்பிரிவினை) விஷயத்தில் உங்களுக்கு (இவ்வாறு) கட்டளையிடுகிறான் ' என்று தொடங்கும் (திருக்குர்ஆன் 04:11 வது) வசனம் அருளப்பட்டது. (புஹாரி:4577, 6723 ,முஸ்லிம்)

ஜாபிர் ரழி அவர்கள் கூறினார்கள்: ஸஃத் இப்னுர் ரபீஃ அவர்களின் மனைவி ஸஃத் அவர்களின் இரண்டு பிள்ளைகளுடன் நபிகளாரிடம் வந்து , அல்லாஹ்வின் தூதரே இது ஸஃதின் இரண்டு பெண்குழந்தைகள் , அவர்களின் தந்தை உஹுத் யுத்தத்தில் உங்களுடன் கலந்துகொண்டு மரணித்தார் , இவர்களின் சகோதரர் அவ்விருவரின் சொத்துக்களையும் எதனையும் விடாமல் எடுத்துக்கொண்டார், அவ்விருவரையும் சொத்து இல்லாத நிலையில் திருமணம் முடித்துக் கொடுக்க முடியாத நிலை , என்று கூறிய போது , நபியவர்கள்; 'அல்லாஹ் தீர்ப்பளிப்பான் ' என்று கூற , வராசத் பற்றிய வசனம் இறங்கியது. உடனே நபியவர்கள் அவ்விருவரின் பெரிய தந்தையிடம் ஆள் அனுப்பி , 'ஸஃதின் பிள்ளைகளுக்கு மூன்றில் இரண்டைக் கொடு , தாய்க்கு எட்டில் ஒன்றைக் கொடு, எஞ்சியது உங்களுக்கு ' என்று கூறினார்கள். (திர்மிதி:2092 , அபூதாவூது: 2891) இந்த செய்தி அப்துல்லாஹிப்னு முஹம்மதிப்னு அகீல் என்பவர் வழியாக பதியப்பட்டுள்ளது , இவர் 'முன்கருல் ஹதீஸ் , மிகப் பலவீனமானவர், இவரது செய்திகள் எழுதப்படக்கூடாது ' போன்ற கடும்

விமர்சனத்திற்குரியவர், சில அறிஞர்கள் இதனை ஹஸன் தரத்தில் வைத்திருந்தாலும் இது பலவீனம் என்பது மிகவும் தெளிவானது.

“வெளிப்படையான விடயம் என்னவென்றால்; முதலில் பதியப்பட்ட ஜாபிர் (ரலி) அவர்களின் புகாரியில் வரும் ஹதீஸானது , அது இந்த சூராவின் கடைசி வசனம் விடயத்தில் இறங்கியது என்பதே, ஏனெனில் அவர் தந்தை மரணிக்கும் நேரம் அவருக்கு இருந்தது சகோதரிகளே , பெண் பிள்ளைகள் அல்ல , இங்கு நாம் அந்த ஹதீஸை பதிந்தது புகாரி இமாம் பதிந்தார்கள் என்பதற்கே, அவர்கள் இந்த இடத்திலேயே அதை கூறியுள்ளார்கள். ஜாபிர் ரலி அவர்களின் இரண்டாவது (விமர்சனத்திற்குரிய) ஹதீஸ் இந்த வசனம் இறங்க பொருத்தமான நிகழ்வு”. (அல்லாஹு அ.ஃலம்) (இப்னு கஸீர்)

## பதினோராவது வசனம் தரும் பாடங்கள்:

((யூஸீகுமுல்லாஹு பீ அவ்லாதிகும் லித்தகரி மிஸ்லு ஹல்லில் உன்சயைய்ன்; அல்லாஹ் உங்கள் பிள்ளைகள் விடயத்தில் , இரண்டு பெண்களுக்கு கிடைக்கும் பங்கை ஒரு ஆண் பிள்ளைக்கு வஸிய்யத் செய்கிறான்))

இந்த வசனம் மூலம் ஆண்கள் பெண்கள் இரு சாராருக்கும் சொத்து சேரவேண்டும் என்று அல்லாஹ் கூறுகின்றான், ஜாஹிலிய்ய கால சமூகத்தின் நடை முறைக்கு மாற்றமாக இந்த வசனம் நீதமாக நடக்குமாறு எடுத்துரைக்கின்றது. (இப்னு கஸீர்)

கொடுக்கப்படுவதில் இருவருக்கும் உரிமை , பங்கில் அல்லாஹ் வித்தியாசப் படுத்தியுள்ளான், மரணித்தவருக்கு ஆண்கள் பெண்கள் இரு சாராரும் இருந்தால், ஆணுக்கு இரண்டு பங்கும் , பெண்ணுக்கு ஒரு பங்கும் என்ற வீதத்தில் கொடுக்க வேண்டும் , ஏன் இந்த வித்தியாசம் ; ஒரு ஆனைப் பொறுத்தவரை, அவன் குடும்பத்திற்கு செலவு செய்ய வேண்டியவன் , கொடுக்கல் வாங்கல் செய்ய கட்டாயப்படுத்தப்பட்டவன் , வியாபாரம் செய்ய வேண்டியவன், மஹர் கொடுக்க வேண்டியவன், அவனுக்கு பெண்கள் எடுப்பதை விட ஒரு மடங்கு கொடுப்பது நியாயமாகிவிட்டது , (பெண் என்பவள் இந்த பொறுப்புக்கள் சாட்டப்படாதவள் அல்லவா)!

சில அறிஞர்கள் இந்த வசனத்திலிருந்து 'அல்லாஹுத் தஆலா ஒரு தந்தை தன் பிள்ளைகளுக்கு அன்பு காட்டுவதை விடவும் தன் படைப்புகள் மீது அதிக கருணை கொண்டவன் , ஏன் பெற்றோர்களுக்கு அவர்களின் பிள்ளைகள் விடயத்தில் அறிவுரை செய்துள்ளான்,

எனவே பெற்றோர்களை விடவும் அல்லாஹ் பிள்ளைகள் மீது இரக்கம் உள்ளவன் என்பது தெளிவு. என்று கூறினார்கள்.

உமர் இப்னு கத்தாப்(ரலி) அவர்கள் கூறினார்கள்: (ஹவாஸின் குலத்தைச் சேர்ந்த) கைதிகள் சிலர் நபி(ஸல்) அவர்களிடம் வந்தார்கள். அவர்களிடையே இருந்த ஒரு பெண்ணின் மார்பில் பால் சுரந்தது. அவள் பாலூட்டுவதற்காக(த் தன் குழந்தையைத் தேடினாள்). குழந்தை கிடைக்கவில்லை. எனவே) , கைதிகளில் எந்தக் குழந்தையைக் கண்டாலும் , அதை (வாரி) எடுத்து(ப் பாலூட்டினாள். தன் குழந்தை கிடைத்தவுடன் அதை எடுத்து)த் தன் வயிற்றோடு அணைத்துப் பாலூட்டலானாள். அப்போது 'எங்களிடம் நபி(ஸல்) அவர்கள் , 'இந்தப் பெண் தன் குழந்தையை தீயில் எறிவாளா ? சொல்லுங்கள்!' என்றார்கள். நாங்கள், 'இல்லை, எந்நிலையிலும் அவளால் எறிய முடியாது ' என்று சொன்னோம். அப்போது இறைத்தூதர்(ஸல்) அவர்கள் , 'இந்தக் குழந்தையின் மீது இவளுக்குள்ள அன்பைவிட அல்லாஹ் தன் அடியார்களின் மீது மிகவும் அன்பு வைத்துள்ளான்' என்று கூறினார்கள். (புஹாரி: 5999, முஸ்லிம்)

மேலும் இந்த வசனம் பெற்றோர்களுக்கு இருந்த 'தன் சொத்தில் வஸிய்யத் செய்யலாம்' என்ற சட்ட ( 2:180 வசன) த்தை மாற்றியமைத்த நாசிக் வகையை சார்ந்த வசனமாகும்.

இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் கூறினார்கள்: (தொடக்கக் காலத்தில்) சொத்து பிள்ளைக்குரியதாகவும் மரண சாசனம் தாய்தந்தைக் குரியதாகவும் இருந்தது. தான் விரும்பியதை அதிலிருந்து அல்லாஹ் மாற்றிவிட்டான். இரண்டு பெண்களின் பங்குக்குச் சமமானதை ஆணுக்கு (அவனுடைய பங்காக) நிர்ணயித்தான். தாய் தந்தையரில் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பங்கை நிர்ணயித்தான். மனைவிக்கு எட்டில் ஒரு பங்கையும், நான்கில் ஒரு பங்கையும் கணவனுக்குப் பாதியையும் நான்கில் ஒரு பங்கையும் நிர்ணயித்தான். (புஹாரி:2747,4578)

அல்லாஹ் கூறுகின்றான்; ((பஇன் குன்ன நிசாஅன் பவ்கஸ்நதைனீ , பலஹுன்ன சுலுசா மாதாரக ; அந்த பிள்ளைகள் இரண்டை விட அதிகமான பெண் பிள்ளைகளாக இருந்தால் விட்டுச் சென்றதில் மூன்றில் இரண்டு அவர்களுக்கு இருக்கின்றது.))

இந்த வாசகம் மூலம் மரணித்தவர் இரண்டு, அல்லது அதற்கு அதிகமான பெண் பிள்ளைகளை விட்டுச் சென்றால் , அவரது சொத்தை மூன்றாக பிரித்து , அதில் இரண்டு பங்கை பெண் பிள்ளைகளுக்கு கொடுக்க வேண்டும் என்பது தெளிவாகின்றது. (இதில் ஏற்க முடியாத சிறியதொரு கருத்து வேற்றுமையை இப்னு கஸீர் இமாமவர்கள் பதிந்து அவர்களே விளக்கமளிக்கின்றார்கள்)

விட்டுச சென்றது ஒரு பெண்ணாக இருந்தால் , அடுத்த வாசகத்தில் அல்லாஹ் கூறுகின்றான்;

((வஇன் கானத் வாஹிததன் பலஹன் னிஸ்பு ; (மரணித்தவருக்கு) இருப்பது ஒரு பெண்ணாக இருந்தால் அவருக்கு அரைவாசியாகும்))

பெண் பிள்ளைகளுக்குள்ள மூன்று நிலைகள்:

1- ஆண் பெண் என்று கலந்திருத்தல், ஆண்களுக்கு கொடுக்கும் இரண்டு பங்கில் ஒரு பங்கு.
2- இருப்பது பெண்களாக இருந்து, இரண்டை விட அதிகமாக இருந்தால்
3- மூன்றில் இரண்டு. ஒரே பெண்ணாக இருந்தால் சொத்தில் அரைவாசி இருக்கிறது.

((வலி அபவைஹி லிகுல்லி வாஹிதின் மின்ஹுமஸ் சுதுசு மிம்மா தரக , இன்கான லஹு வலத் ; மரணித்தவருக்கு பிள்ளை இருப்பின் அவர் விட்டுச் சென்றதில் பெற்றோர் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒன்று இருக்கின்றது))

((பஇன் லம் யகுன்லஹு வலதுன் வவரிசஹு அபவாஹு , பலிஉம்மிஹிஸ் சுலுஸ்; அவருக்கு பிள்ளை இல்லையெனில் பெற்றோர் இருவரும் அனந்தரம் பெறுவார், தாய்க்கு மூன்றில் ஒன்று இருக்கின்றது))

(பஇன் கான லஹு இ்ஃவதுன் பலி உம்மிஹிஸ் சுதுஸ் ; மரணித்தவருக்கு சகோதரர்கள் இருந்தால் தாய்க்கு ஆறில் ஒன்று இருக்கின்றது))

இந்த வசனங்களை பார்க்கும் போது பெற்றோர்களுக்கு மூன்று நிலைகள் இருப்பதை பார்க்கலாம்;

1- மரணித்தவரின் பிள்ளைகளோடு அவ்விருவரும் இருத்தல் , அவ்விருவருக்கும் ஆறில் ஒன்று இருக்கின்றது,
2- பிள்ளைகள் இல்லாமல் பெற்றோர் மாத்திரம் இருக்கும் நிலை , தாய் மூன்றில் ஒன்றை எடுக்க , தந்தை மீதியை எடுப்பவர் (த்ஃசீப் அடிப்படையில்) மீதம் தந்தைக்கு சேரும். இங்கு தாய்க்கு இருப்பதில் இரு மடங்கை தந்தை எடுப்பார்.

(இங்கும் இப்னு கஸீர் இமாமவர்கள் , பெற்றோருடன் கணவன் அல்லது மனைவி இருந்தால் எப்படி எடுப்பார்கள் என்பதில் இருக்கும் கருத்து வேற்றுமையை பதிந்துள்ளார்)

3- அவ்விருவரும் மரணித்தவரின் சகோதர்களுடன் வருவது , சகோதரர்களுக்கு எதுவும் இல்லாவிட்டாலும் , தாய்க்கு இருந்த ஆறில் ஒன்று என்ற நிலையில் இருந்து , மூன்றில் ஒன்று என்ற நிலைக்கு

தள்ளப்படுவர். அவருக்கு வேறு அனந்தரம் பெறுபவர் இல்லையென்றால் தந்தை மீதியை எடுப்பார்.

(இங்கும் இப்னு கஸீர் இமாமவர்கள் , இரு சகோதரர்கள் இருந்தால் தாயின் பங்கு ஆறில் ஒன்றாகுமா என்ற கருத்து வேற்றுமையை பதிந்துள்ளார்)

((மிம்பஃதி வஸிய்யதின் யூசீ பிஹா அவ்தைன் ; மரணித்தவர் செய்த வஸிய்யத்தை அல்லது கடனை நிறைவேற்றிய பின்னர் (பங்கு கொடுக்க வேண்டும்))

இங்கு அல்லாஹ் சொல்லித் தருவது என்னவென்றால் ; அனந்தர சொத்தை பங்கு வைக்க முன்னர் கடன் அல்லது வஸிய்யத் இருந்தால் அதனை நிறைவேற்ற வேண்டும் என்பதே, ஏனெனில் கடன், உயில் என்பது மரணித்தவர் மீது இருக்கும் சுமையாகும் , அனந்தரம் என்பது உயிரோடு இருப்போருக்கு கிடைக்கும் ஒரு வரம் ஆகும் , எனவே மரணித்தவர் மீதுள்ள சுமையை இறக்குவதே முதல் கடமையாக இருக்க வேண்டும்.

அதிலும் கடன் எனும் போது மரணித்தவரின் மறுமை வெற்றியோடு சம்பந்தப்பட்ட ஒன்று, அது நிறைவேற்றப்பட்டால்தான் அவருக்கு வெற்றி எனும் போது அதனை முற்படுத்துவதும் அவசியம். வஸிய்யத்தை நிறைவேற்ற வில்லையென்றால் அனந்தரக்காரர்கள் தான் குற்றம் பிடிக்கப் படுவார்கள் , மரணித்தவர் அல்ல , எனும் போது கடனை முதலில் நிறைவேற்றுவதும் அவசியம்.

கடனை முதன்மை படுத்துவதில் ஸலப் (முன்னால்) கலப் (பின்னால்) வந்த அறிஞர்களுக்கிடையில் ஏகோபித்த முடிவு இ ருந்ததாக பதிந்துள்ளார்கள் இப்னு கஸீர் இமாமவர்கள்.

வஸிய்யத்தை நிறைவேற்ற முன்னர் கடனை நிறைவேற்ற வேண்டும் என்பதற்கு சான்றாக திர்மிதியில் 2094 வரும் ஹதீஸை இப்னு கஸீர் இமாம் அவர்கள் பதிந்துள்ளார்கள் , அதில் ஹாரிஸுல் அஃவர் என்ற (அவர் இப்னு கஸீர் இமாம் சொல்வது போன்று வராசத் பற்றிய நல்ல அறிவுள்ளவராக இருந்தாலும்) 'பொய்யர்(தபகாதுல் குப்ரா ; ஷஃபீ அவர்களின் கூற்று) ' என்னும் அளவுக்கு விமர்சிக்கப்பட்டுள்ள அறிவிப்பாளர் இடம் பெற்றுள்ளார் , எனவே இது மிகவும் பலவீனமான செய்தியாகும். (அல்லாஹு அஃலம்)

((ஆபாஉகும் வஅப்னாஉகும் லாதத்ரூன அய்யுஹும் அக்ரபு லகும் னப்ஆ ; உங்கள் பெற்றோர்களிலும், பிள்ளைகளிலும் உங்களுக்கு அதிகம் பயணளிப்போர் யார் என்று உங்களுக்கு தெரியாது))

அனந்தர சொத்தை பங்கு வைக்கும் ஒருவருக்கு ஏன் இந்த வித்தியாசமான பங்குகள் என்ற கேள்வி எழலாம் , அதற்கே அல்லாஹ் இங்கு பதில் அளிக்கின்றான் போலும்,

இப்னு கஸீர் இமாம் கூறுகின்றார்கள்: 'அந்த வசனத்தில் அல்லாஹ் சொல்வது, "நாங்கள் பிள்ளைகளுக்கும் பெற்றோர்களுக்கும் வராசத்தில் சம உரிமை கொடுத்து, பங்கில் வித்தியாசப்படுத்தினோம் , இது ஜாஹிலிய்ய கால நடை முறைக்கும், இஸ்லாத்தின் ஆரம்பத்தில் இருந்த 'இப்னு அப்பாஸ் ரலி கூறியது போன்ற தந்தைக்கு வஸிய்யத்தும் , பிள்ளைக்கு சொத்தும்' என்ற சட்டத்துக்கும் மாற்றமாக இந்த வராசத்து சட்டம் இருக்கின்றது. ஒவொவொருவருக்கும் அவரவர்களுக்கு ஏற்ற பங்கு விதிக்கப்பட்டுள்ளது. " ஏனெனில் பிள்ளைகளிடம் இருந்து கிடைக்காத நலவுகள் தந்தையிடம் கிடைக்கவும் முடியும் , அதற்கு மாற்றமாக நடக்கவும் முடியும் , அதனால் தான் இந்த நலவு யாரால் ஏற்படும் என்று உங்களுக்கு தெரியாது என்கிறான். அதனால் தான் இருவருக்கும் சொத்து கிடைக்கும் என்பதுடன் அல்லாஹ் அறிந்த நலவின் படி பங்கை வித்தியாசமாக விதித்துள்ளான்'. (அல்லாஹு அ*ஃ*லம்)

((பரீலதம் மினல்லாஹ் ; அல்லாஹ்விடமிருந்து கட்டாயம் என்ற நிலையில் வந்த சட்டமாகும்.))

அடுத்து, பங்கில் ஏற்படும் இந்த வித்தியாசங்களுக்கு அமைவாக அதனை நிறைவேற்றுவது அல்லாஹ் விதித்திருக்கும் கடமை , என்பதுடன் இதில் மறைந்திருக்கும் நுணுக்கத்தை அல்லாஹ்வே அறிந்தவன் என்பதை பின்னால் அல்லாஹ் கூறி வசனத்தை நிறைவு செய்கின்றன. எனவேதான் அல்லாஹ் கூறுகின்றான்:

((இன்னல்லாஹ கான அலீமன் ஹகீமா; நிச்சியமாக அல்லாஹ் (அனைத்தையும்) அறிந்தவனாகவும், நுணுக்கமானவனுமாக இருக்கின்றான்.))

وَلَـكُمْ نِصْفُ مَا تَرَكَ اَزْوَاجُكُمْ اِنْ لَّمْ يَكُنْ لَّهُنَّ وَلَدٌ ۚ فَاِنْ كَانَ لَهُنَّ وَلَدٌ فَلَـكُمُ الرُّبُعُ
مِمَّا تَرَكْنَ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصِيْنَ بِهَاۤ اَوْ دَ يْنٍ‌ؕ وَلَهُنَّ الرُّبُعُ مِمَّا تَرَكْتُمْ اِنْ لَّمْ يَكُنْ
لَّكُمْ وَلَدٌ ۚ فَاِنْ كَانَ لَـكُمْ وَلَدٌ فَلَهُنَّ الثُّمُنُ مِمَّا تَرَكْتُمْ مِّنْۢ بَعْدِ وَصِيَّةٍ تُوْصُوْنَ بِهَاۤ اَوْ دَ
يْنٍ‌ؕ وَاِنْ كَانَ رَجُلٌ يُّوْرَثُ كَلٰلَةً اَوِ امْرَاَةٌ وَّلَهٗۤ اَخٌ اَوْ اُخْتٌ فَلِكُلِّ وَاحِدٍ مِّنْهُمَا السُّدُسُ‌ۚ
فَاِنْ كَانُوْۤا اَكْثَرَ مِنْ ذٰ لِكَ فَهُمْ شُرَكَآءُ فِى الثُّلُثِ مِنْۢ بَعْدِ وَصِيَّةٍ يُّوْصٰى بِهَاۤ اَوْ دَ يْنٍ
ۙ غَيْرَ مُضَآرٍّ‌ ۚ وَصِيَّةً مِّنَ اللّٰهِ‌ؕ وَاللّٰهُ عَلِيْمٌ حَلِيْمٌؕ

இன்னும் உங்கள் மனைவியர் விட்டுச் சென்றதில் - அவர்களுக்குப் பிள்ளை இல்லாதிருந்தால் உங்களுக்குப் பாதி பாகம் உண்டு; அவர்களுக்குப் பிள்ளை இருந்தால் அவர்கள் விட்டுச் சென்றவற்றிலிருந்து உங்களுக்கு கால் பாகம்தான்

- (இதுவும்) அவர்கள் செய்திருக்கிற மரண சாஸனத்தையும், கடனையும் நிறைவேற்றிய பின்னர்தான் - தவிர உங்களுக்குப் பிள்ளையில்லாதிருப்பின் நீங்கள் விட்டுச் சென்றதிலிருந்து அவர்களுக்குக் கால் பாகம்தான்; உங்களுக்குப் பிள்ளை இருந்தால், அப்போது அவர்களுக்கு நீங்கள் விட்டுச் சென்றதில் எட்டில் ஒரு பாகம்தான்; (இதுவும்) நீங்கள் செய்திருக்கும் மரண சாஸனத்தையும் கடனையும் நிறைவேற்றிய பின்னரேதான்; தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஓர் ஆணோ அல்லது பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் - அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு; ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் - (இதுவும்) அவர்களின் மரண சாஸனமும் கடனும் நிறைவேற்றிய பின்னர்தான்; ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும்; இன்னும் அல்லாஹ் (யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையோனுமாகவும் இருக்கின்றான்.

(4:12)

## பன்னிரண்டாவது வசனம் தரும் பாடங்கள்:

((வலகும் நிஸ்பு மாதரக அஸ்வாஜுகும் இன்லம் யகுன் லஹுன்ன வலத் , பஇன் கான லஹுன்ன வலதுன் பலகுமுர் ருபுஉ மிம்மா தரக்ன மிம்பஃதி வசிய்யதின் யூஸீன பிஹா அவ்தைன் ; உங்களது மனைவிமார்களுக்கு பிள்ளைகள் இல்லையென்றால் அவர்கள் விட்டுச் செல்லும் சொத்தில் உங்களுக்கு அரைவாசி இருக்கின்றது , அவர்களுக்கு பிள்ளைகள் உள்ள நிலையில் உங்களுக்கு நான்கில் ஒன்று இருக்கின்றது, அவர்கள் செய்த வஸிய்யத், அல்லது கடன் கொடுக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்படும்.))

கணவனுக்கு இருக்கும் நிலைகள் இரண்டு;

1- மனைவிக்கு பிள்ளைகள் இல்லையென்றால் சொத்தில் அரைவாசி,
2- பிள்ளைகள் இருந்தால் நான்கில் ஒன்று கொடுக்கப்படும்

முன்னர் சொல்லப்பட்டது போன்று கடன் முதலில் , பிறகு வஸிய்யத் , பிறகு சொத்து பங்கீடு நடைபெற வேண்டும். பிள்ளைகளின் இடத்தில் தான் பேர பிள்ளைகளும் வருவார்கள் , அவர்கள் தலைமுறை அப்படியே இறங்கி சென்றாலும் சரியே!

((வலஹுன்னர் ருபுஉ மிம்மா தரக்தும், இன்லம் யகுன் லகும் வலது, பஇன்கான லகும் வலதுன் பலஹுன்னஸ் சுமுனு மிம்மா தரக்தும் மின் பஃதி வஸிய்யதின் தூஸூன பிஹா அவ்தைன்; நீங்கள் விட்டுச் செல்வதில் உங்களுக்கு பிள்ளை இல்லையென்றால் அவர்களுக்கு (மனைவி மார்களுக்கு) நான்கில்

ஒன்றும், உங்களுக்கு பிள்ளை இருந்தால் அவர்களுக்கு எட்டில் ஒன்றும் இருக்கின்றது, நீங்கள் செய்த வஸிய்யத், அல்லது கடன் கொடுக்கப்பட்ட பின்னர் நிறைவேற்றப்படும்.)

மனைவி மார்களுக்கு இரண்டு நிலைகள்;

1- கணவனுக்கு பிள்ளை இல்லையென்றால் நான்கில் ஒன்று,
2- பிள்ளை இருந்தால் எட்டில் ஒன்று , மனைவி மார்கள் எத்தனை இருந்தாலும் குறிப்பிட்ட பங்கில் அவர்கள் சமமாக பங்கு கொள்வார்கள்.

((வஇன் கான ரஜுலுன் யூரசு கலாலதன் அவிம்ரஅதுன் வலஹு ஆகுன் அவ் உக்துன் பலிகுல்லி வாஹிதின் மின்ஹுமஸ் சுதுஸ் , பஇன் காநூ அக்சர மின் தாலிக பஹும் ஷுராகாஉ பிஸ் சுலுஸ் ; தந்தை, பாட்டன் போன்ற முன் வாரிசுகளோ அல்லது பிள்ளை, பேரன் போன்ற பின் வாரிசுகளோ இல்லாத ஓர் ஆணோ அல்லது பெண்ணோ - இவர்களுக்கு ஒரு சகோதரனோ அல்லது சகோதரியோ இருந்தால் - அவர்கள் ஒவ்வொருவருக்கும் ஆறில் ஒரு பாகம் உண்டு; ஆனால் இதற்கு அதிகமாக இருந்தால் அவர்கள் மூன்றில் ஒரு பாகத்தில் சமமாகப் பங்கிட்டுக் கொள்ளவேண்டும்))

தந்தை பாட்டன், பிள்ளை பேரன் இல்லாத ஒரு ஆண் அல்லது பெண் 'கலாலா' என்ற வார்த்தை யைக்கு கொண்டு நாடப்படுகின்றது. இதனையே அதிகமான நபித்தோழர்களும் கருத்துவேற்றுமை இல்லை என்னும் அளவுக்கு அறிஞர்களும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

அதே நேரம் இப்னு அப்பாஸ் ரலி அவர்களைத் தொட்டு, 'பிள்ளை இல்லாதவரே கலாலாவைக் கொண்டு நாடப்பட்டது ' என்ற கருத்தும் இருக்கின்றது , முதல் கருத்தே சரியானது என்று இப்னு கஸீர் இமாமவர்கள் கூறுகின்றார்கள். (இப்னு கஸீர் சுருக்கமாக)

((மின் பஃதி வஸிய்யதின் யூசா பிஹா அவ்தைன்; வஸிய்யத் செய்யப்பட்டதை அல்லது கடனை நிறைவேற்றிய பின்னர் பகிர்ந்தளிக்கப்படும்))

((கைர முளார்ரின் வஸிய்யதம் மினல்லாஹ் ; ஆனால் (மரண சாஸனத்தைக் கொண்டு வாரிசுகள்) எவருக்கும் நஷ்டம் ஏற்படாத நிலையில் பங்கு வையுங்கள், (இது) அல்லாஹ்வினால் விதிக்கப்பட்டதாகும்))

வஸிய்யத் என்ற போர்வையில் அனந்தரக்காரர்களுக்கு பாதிப்பு செய்து , அநியாயம் இளைத்து விடக்கூடாது என்பது அல்லாஹ்வின் கட்டளை. வஸிய்யத் என்பது மூன்றில் ஒன்றில் நிறை வேற்றப்படவேண்டும் , வஸிய்யத்தும் அப்படியே அமைய வேண்டும் என்பதை முன்னரே ஆதாரத்தோடு பார்த்தோம்.

((வல்லாஹுﷺ அலீமுன் ஹலீம் ; இன்னும் அல்லாஹ் ( யாவற்றையும்) நன்கறிந்தவனாகவும், மிக்க பொறுமையுடையோனாகவும் இருக்கின்றான்.))

வராசத் சட்டத்தை மிகவும் தெளிவாக சொல்லித் தந்த அல்லாஹ், அவனே அனைத்தையும் அறிந்தவன், பொறுமையாக மனிதர்கள் செய்வதை கவனித்துக் கொண்டிருப்பவன் என்பதைக் கூறி மனிதர்கள் அந்த அல்லாஹ்வின் சிந்தனையோடு இந்த கட்டளையை நடைமுறைப்படுத்த வேண்டும் என்பதையே விரும்புகின்றான்.

تِلْكَ حُدُوْدُ اللّٰهِ‌ؕ وَمَنْ يُّطِعِ اللّٰهَ وَرَسُوْلَهٗ يُدْخِلْهُ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ خٰلِدِيْنَ فِيْهَا‌ ؕ وَذٰ لِكَ الْفَوْزُ الْعَظِيْمُ 4:14 وَمَنْ يَّعْصِ اللّٰهَ وَرَسُوْلَهٗ وَيَتَعَدَّ حُدُوْدَهٗ يُدْخِلْهُ نَارًا خَالِدًا فِيْهَا وَلَهٗ عَذَابٌ مُّهِيْنٌ

இவை அல்லாஹ்வின் வரையறைகளாகும்; எவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்களை சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்வான்; அதன் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பார்கள் - இது மகத்தான வெற்றியாகும். 4:14 எவன் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் மாறு செய்கிறானோ, இன்னும் அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுகிறானோ அவனை நரகில் புகுத்துவான்; அவன் அங்கு (என்றென்றும்) தங்கி விடுவான்; மேலும் அவனுக்கு இழிவான வேதனையுண்டு. (4:13,14)

## பதின் மூன்று, பதின் நான்காவது வசனங்கள் தரும் பாடங்கள்:

((தில்க ஹுﷺதூதுல்லாஹ் ; அவைதான் அல்லாஹ்வின் வரையறைகளாகும் )) முன்னால் சொல்லப்பட்ட பங்குகள் மரணித்தவருக்கு நெருக்கம் , தேவையுள்ளவர் என்ற அடிப்படையில் அல்லாஹ் விதித்தவையே , அல்லாஹ் விதித்திருக்கும் விதிகளை மனிதன் மீறக்கூடாது என்பதே இந்த கட்டளையின் நோக்கம்.

அதனையே அல்லாஹ் பிவருமாறு கூறுகின்றான்: (( வமன் யுத்திஇல்லாஹ வரஸூலஹுﷺ; யார் அல்லாஹ்வுக்கும் , அவன் தூதருக்கும் கட்டுப்படுகின்றார்களோ))

பொதுவாக அல்லாஹ்வுக்கும் அவன் தூதருக்கும் கட்டுப்படுவதுடன் குறிப்பாக வராசத் விடயத்தில் விதித்ததை அப்படியே கூட்டாமலும் குறைக்காலும் யார் நிறை வேற்றுகின்றாரோ அவருக்கு அல்லாஹ் கொடுக்கும் கூலியே அடுத்த வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

((யுத்கில்ஹு ஜன்னாதின் தஜ்ரீ மின் தஹ்திஹல் அன்ஹாரு காலிதீன பீஹா வதாளிக பவ்சுல் அளீம் ; எவர் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் கீழ்படிந்து நடக்கிறார்களோ அவர்களை சுவனபதிகளில் பிரவேசிக்கச் செய்வான்; அதன் கீழே ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும், அவர்கள் அங்கே என்றென்றும் இருப்பார்கள் - இது மகத்தான வெற்றியாகும்.))

அதே நேரம் யார் அல்லாஹ்வின் சட்டத்தை மீறி வரம்பை மீறி நடக்கின்றாரோ அவருக்கு அழிவு தரும் வேதனை உண்டு என்பதையும் அடுத்த வசனத்தில் அல்லாஹ் எச்சரிக்கின்றான் .

((வமன் யஃசில்லாஹ வரஸூலஹு வயதஅத்த ஹுதூதஹு யுத்கில்ஹு நாரன் காளிதன் பீஹா வலஹு அதாபுன் முஹீன் ; எவன் அல்லாஹ்வுக்கும், அவன் தூதருக்கும் மாறு செய்கிறானோ, இன்னும் அவன் விதித்துள்ள வரம்புகளை மீறுகிறானோ அவனை நரகில் புகுத்துவான்; அவன் அங்கு (என்றென்றும்) தங்கி விடுவான்; மேலும் அவனுக்கு இழிவான வேதனையுண்டு.))

**சூரதுன் நிசாவின் கடைசி வசனமும் வராசத்துடன் சம்பந்தப்பட்டது என்பதனால் அதன் விளக்கத்தையும் இங்கு பார்ப்போம்;**

يَسْتَفْتُوْنَكَ ؕ قُلِ اللّٰهُ يُفْتِيْكُمْ فِى الْـكَلٰلَةِ ؕ اِنِ امْرُؤٌا هَلَكَ لَـيْسَ لَهٗ وَلَدٌ وَّلَهٗۤ اُخْتٌ فَلَهَا نِصْفُ مَا تَرَكَ‌ ۚ وَهُوَ يَرِثُهَاۤ اِنْ لَّمْ يَكُنْ لَّهَا وَلَدٌ ‌ؕ فَاِنْ كَانَـتَا اثْنَتَيْنِ فَلَهُمَا الثُّلُثٰنِ مِمَّا تَرَكَ‌ ؕ وَاِنْ كَانُوْۤا اِخْوَةً رِّجَالًا وَّنِسَآءً فَلِلذَّكَرِ مِثْلُ حَظِّ الْاُنْثَيَيْنِ‌ؕ يُبَيِّنُ اللّٰهُ لَـكُمْ اَنْ تَضِلُّوْا‌ ؕ وَاللّٰهُ بِكُلِّ شَىْءٍ عَلِيْمٌ

(நபியே!) கலாலா (தகப்பன், தாய், பாட்டன், பிள்ளை, பேரன் ஆகிய வாரிசுகள் இல்லாத சொத்து) பற்றிய மார்க்கக் கட்டளையை அவர்கள் உம்மிடம் கேட்கிறார்கள். நீர் கூறும்: அல்லாஹ் உங்களுக்கு (இவ்வாறு) கட்டளையிடுகிறான்; ஒரு மனிதன் இறந்துவிட்டால், அவனுக்கு மக்கள் இல்லாமலிருந்து ஒரு சகோதரி மட்டும் இருந்தால், அவளுக்கு அவன் விட்டுச் சென்றதிலிருந்து சரி பாதி பங்கு உண்டு இதற்கு மாறாக ஒரு பெண் இறந்து விட்டால், அவளுக்கு மக்கள் யாரும் இல்லாதிருந்தால், (அவளுடைய சகோதரனாகிய) அவன் அவள் சொத்து முழுமைக்கும் வாரிசு ஆவான்; இரு சகோதரிகள் இருந்தால் அவன் விட்டுச் சென்ற சொத்தில் மூன்றில் இரண்டு பாகத்தை அடைவார்கள்; அவளுக்கு உடன் பிறந்தவர்கள் ஆண்களும் பெண்களுமாக இருந்தால், இரண்டு பெண்களுக்குரிய பாகம் ஓர் ஆணுக்கு உண்டு - நீங்கள் வழி தவறாமல் இருப்பதற்காகவே அல்லாஹ் உங்களுக்கு (இவ்விதிகளை) விளக்கி வைக்கிறான்; அல்லாஹ் யாவற்றையும் நன்கு அறிந்தவனாக இருக்கின்றான். (4:176)

இந்த வசனமே அல்குர்ஆனில் கடைசியாக இறக்கப்பட்டது;

பரா.ஃ பின் ஆசிப் ரழி அவர்கள் கூறினார்கள்: முழுமையான வடிவில் அருளப்பட்ட கடைசி அத்தியாயம், 'பராஅத்' (என்னும் 9-வது 'அத் தவ்பா') அத்தியாயம் ஆகும். கடைசியாக அருளப்பட்ட அத்தியாயப் பகுதி 'அந்நிஸா'வின் இறுதிப் பகுதியாகும். அந்த வசனம் வருமாறு:

(நபியே!) மக்கள் உங்களிடம் 'கலாலா' பற்றி தீர்ப்பு வழங்குமாறு கேட்கிறார்கள். நீங்கள் கூறுங்கள்: அல்லாஹ் உங்களுக்கு 'கலாலா' பற்றி இவ்வாறு தீர்ப்பளிக்கிறான்.. (திருக்குர்ஆன் 04: 176) (புஹாரி: 4364, முஸ்லிம்)

ஜாபிர் (ரலி) அவர்கள் கூறினார்கள்: 'நான் நோயுற்றிருந்தபோது நபி(ஸல்) அவர்கள் என்னை நலம் விசாரிக்க வந்தார்கள். நான் மயக்நிலையில் இருந்தேன். அப்போது நபி(ஸல்) அவர்கள் வு ளுச் செய்துவிட்டு அந்தத் தண்ணீரை என் மீது ஊற்றினார்கள். உடனே நான் மயக்கத்திலிருந்து (தெளிந்து) உணர்வு பெற்றேன். அப்போது நபி(ஸல்) அவர்களிடம், 'இறைத்தூதர் அவர்களே! என்னுடைய சொத்துக்கு வாரிசு யார்? என்னுடன் உடன் பிறப்புகள் மட்டுமே எனக்கு வாரிசாகும் நிலையில் நான் உள்ளேனே?' என்று நான் கேட்டபோது பாகப்பிரிவினை பற்றிய ( திருக்குர்ஆன் 04:176-வது) வசனம் அருளப்பட்டது' (புஹாரி:194, முஸ்லிம்) (ஸபபுன் னுசூல் பற்றிய விளக்கம் 4:11 வசனத்தில் தெளிவு படுத்தப்பட்டது)

(யஸ்தப்தூனக ; (நபியே உங்களிடம் (கலாலா பற்றி) முடிவு கேட்கின்றார்கள் )) ((குல் ; நபியே நீங்கள் சொல்லுங்கள் )) (( அல்லாஹு யுப்தீகும் பில் கலாலா ; அல்லாஹ் உங்களுக்கு கலாலா பற்றிய தீர்ப்பை தருகின்றான்))

(கலாலா என்பது தந்தை பாட்டன், பிள்ளை பேரன் இல்லாத ஆண், பெண் என்ற விளக்கத்தை இருக்கும் கருத்து வேற்றுமையுடன் முன்னர் பார்த்தோம்)

கலாலா பற்றிய சட்டம் உமர் (ரலி) அவர்கள் விளக்கம் தேடிய ஒரு முக்கியமான சட்டமே.

இப்னு உமர்(ரலி) அவர்கள் கூறினார்கள்: (என் தந்தை) உமர்(ரலி) இறைத்தூதர்(ஸல்) அவர்களின் சொற்பொழிவு மேடையில் (மிம்பர்) இருந்தபடி உரை நிகழ்த்தினார்கள். அப்போது கூறினார்கள். ... இறைத்தூதர்(ஸல்) அவர்கள் மூன்று விஷயங்கள் குறித்துத் தெளிவானதொரு முடிவை நமக்கு எடுத்துரைத்துவிட்டு நம்மைப் பிரிந்திருந்தால் நன்றாயிருந்திருக்கும் என நான் விரும்பியதுண்டு:

1. ஒருவரின் சொத்தில் ( அவருக்குப் பெற்றோரோ, மக்களோ இல்லாமல் சகோதரன் இருக்கும்போது) அவரின் பாட்டனாருக்கு எவ்வளவு பங்கு கிடைக்கும்?

2. 'கலாலா' என்றால் என்ன?

3. வட்டியின் சில வகைகள் குறித்த சட்டம்... (புஹாரி:5588, முஸ்லிம்)

மஃதான் பின் அபீதல்ஹா (ரஹ்) அவர்கள் கூறியதாவது: (கலீஃபா) உமர் பின் அல்கத்தாப் (ரலி) அவர்கள் ஒரு வெள்ளிக் கிழமை (ஜுமுஆ) தினத்தன்று உரை நிகழ்த்தினார்கள். .... நான் எனக்குப் பின்னால் " கலாலா"வைவிட ஒரு முக்கியமான விஷயத்தை விட்டுச் செல்லவில்லை. நான், இது குறித்து அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களிடம் விவாதித்ததைப் போன்று வேறு எதற்காகவும் விவாதித்ததில்லை. அல்லாஹ்வின் தூதர் (ஸல்) அவர்களும் இது தொடர்பாக என்னிடம் கடிந்துகொண்டதைப் போன்று வேறு எதற்காகவும் என்னிடம் கடிந்துகொண்டதில்லை. எந்த அளவிற்கு (அவர்கள் என்னைக் கடிந்துகொண்டார்கள்) எனில், அவர்கள் தமது விரலால் என் நெஞ்சில் குத்தினார்கள். "உமரே! அந்நிஸா அத்தியாயத்தின் கடைசியிலுள்ள (4:176ஆவது) வசனம் உமக்குப் போதுமானதாக இல்லையா?" என்று கேட்டார்கள்.

நான் இன்னும் (சிறிது காலம்) வாழ்ந்தால் இந்த " கலாலா" தொடர்பாகக் குர்ஆனைக் கற்றோரும் கல்லாதோரும் தீர்ப்பளிக்கும் விதத்தில் தெளிவான ஒரு தீர்ப்பை வழங்குவேன். (முஸ்லிம்)

((இனிம் ரூஉன் ஹலக லைஸ லஹு வலதுன் வலஹு உக்துன் பலஹா நிஸ்பு மாதரக்; ஒரு மனிதர் மரணித்து, அவருக்கு குழந்தை இல்லாத நிலையில் ஒரு சகோதரி இருந்தால் , அவளுக்கு விட்டுச் சென்றதில் அரைவாசி இருக்கின்றது.))

மரணித்தவரின் சகோதரிக்கு உள்ள சட்டம்;

இந்த வசனத்தில் மரணிக்கும் ஒருவருக்கு பிள்ளை இல்லாத நிலையில் ஒரு சகோதரி இருந்தால் அவளுக்கு சொத்தில் அரைவாசி கொடுக்கப்பட வேண்டும் என்று சொல்லப் படுகின்றது, இங்கு தந்தை பற்றி சொல்லப்படவில்லை , இப்னு கஸீர் இமாவார்கள் கூறினார்கள் , வராசத் பற்றிய வசனங்களை சிந்தித்தால் சகோதரி பங்கு பெறுவதற்கு தந்தையும் இருக்கக் கூடாது என்பது புரியும் , தந்தை உயிரோடு இருந்தால் அவளுக்கு ஒன்றும் கிடைக்காது , ஏனெனில் அறிஞர்களின் ஏகோபித்த முடிவுபடி தந்தை என்பவர் அவளின் பங்கை தடுக்கும் (ஹாஜிப்) ஆவார். (இப்னு கஸீர்)

ஹுஸைல் இப்னு ஷுரஹ்பீல்(ரஹ்) அவர்கள் கூறினார்கள்: அபூ மூஸா(ரலி) அவர்களிடம், (இறந்த ஒருவருக்கு) மகள், மகனுடைய மகள், சகோதரி ஆகியோர் (இருந்தால், அவர்களுக்குக் கிடைக்கும் சொத்துரிமை) குறித்து வினவப்பட்டது. அதற்கு அவர்கள் 'மகளுக்கு (மொத்தச் சொத்தில்) பாதியும் சகோதரிக்கு (மீதி)ப்

பாதியும் கிடையாது)' என்று கூறிவிட்டு, '(வேண்டுமானால்,) இப்னு மஸ்வூத்(ரலி) அவர்களிடம் சென்று (கேட்டுப்) பாருங்கள். அன்னாரும் என் (கருத்தி)னையே பிரதிபலிப்பார்கள்' என்றார்கள். எனவே, இப்னு மஸ்வூத்(ரலி) அவர்களிடம் (சென்று) அபூ மூஸா(ரலி) அவர்களின் கூற்றைத் தெரிவித்து (இது குறித்து விளக்கம்) கேட்கப்பட்டது. அதற்கு அவர்கள், 'இவ்வாறு (மகனின் மகளுக்கு சொத்தில் பங்கு இல்லை என்று) நானும் சொன்னால் நிச்சயம் நான் வழிதவறியவனாகி விடுவேன்; நான் நேர்வழியடைந்தவர்களில் ஒருவனாக இருக்கமாட்டேன். இந்த விஷயத்தில் நபி(ஸல்) அவர்கள் அளித்த தீர்ப்பையே நானும் அளிக்கிறேன்: மகளுக்குப் பாதியும் மகனின் மகளுக்கு ஆறில் ஒரு பாகமும் வழங்கப்படவேண்டும். அப்போதுதான் மூன்றில் இரண்டு பாகங்கள் நிறைவாகும். எஞ்சியிருப்பது சகோதரிக்கு உரியதாகும்' என்றார்கள். பின்னர் அபூ மூஸா(ரலி) அவர்களிடம் சென்று இப்னு மஸ்வூத்(ரலி) அவர்கள் சொன்னதைத் தெரிவித்தோம். அப்போது, 'இந்தப் பேரறிஞர் (இப்னு மஸ்வூத்(ரலி) உங்களிடையே இருக்கும் வரை என்னிடம் (விளக்கம்) கேட்காதீர்கள்' என்று (புகழ்ந்து) சொன்னார்கள். (புஹாரி:6736)

அஸ்வத் இப்னு யஸீத்(ரஹ்) அவர்கள் அறிவித்தார்ள்: இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில் (யமன் நாட்டுக்கு வந்த) முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்கள், '(சொத்தில்) பாதி இறந்தவரின்) மகளுக்கும் (மீதிப்) பாதி சகோதரிக்கும் உரியது' என்று தீர்ப்பளித்தார்கள். இதன் அறிவிப்பாளர்களில் ஒருவரான சுலைமான் இப்னு மிஹ்ரான் அல்அஃமஷ்(ரஹ்) அவர்களின் அறிவிப்பில் 'முஆத் இப்னு ஜபல்(ரலி) அவர்கள் எங்களிடையே (மேற்கண்டவாறு) தீர்ப்பளித்தார்கள்' என்று காணப்படுகின்றது. 'இறைத்தூதர்(ஸல்) அவர்களின் காலத்தில்' என்ற குறிப்பு இடம் பெறவில்லை. (புஹாரி: (புஹாரி: 6741, சுனனுல் குப்ரா லில்பைஹகீ )

அதேநேரம் இப்னு அப்பாஸ் (ரலி) அவர்களும் இன்னு சிலரும் மரணித்தவருக்கு பெண் பிள்ளை இருந்தாலும் அவரின் சகோதரிக்கு சொத்தில் பங்கு இல்லை என்று இந்த வசனத்தை ஆதாரமாக வைத்து கூறினார்கள். பெருபான்மையான அறிஞர்கள் இதற்கு மாற்றமாக கூறியுள்ளார்கள். (இப்னு கஸீர்)

((வஹுவ யரிசுஹா இன்லம் யகுன் லஹா வலது ; (மரணித்தவர் பெண்ணாக இருந்தால்) அவளது சகோதரர் அவளுக்கு பிள்ளை இல்லாத போது அவளுக்கு வாரிசாக வருவார்.))

ஒரு பெண் இறக்கும் நேரம் அவளுக்கு பிள்ளைகள் , பெற்றோர்கள் இல்லை என்றால் அவளது சகோதரன் அனைத்து சொத்தையும் (அசபத்) என்ற அடிப்படையில் எடுப்பான். பிள்ளை இருந்தால் சகோதரனுக்கு எதுவுமில்லை ,

அதேநேரம் அந்த சகோதரனோடு பங்கு விதிக்கப்பட்ட யாரும் இருந்தால் அவரது பங்கு போக மீதத்தை சகோதரன் எடுப்பான்.

இப்னு அப்பாஸ் (ரலி) அவர்கள் கூறினார்கள்: இறைத்தூதர்(ஸல்) அவர்கள் கூறினார்கள்: (பாகப் பிரிவினை தொடர்பாகக் குர்ஆனில் நிர்ணயிக்கப்பெற்றுள்ள) பாகங்களை ( முதலில்) அவற்றுக்கு உரியவர்களிடம் சேர்த்துவிடுங்கள். பிறகு எஞ்சியிருப்பது ( இறந்தவரின்) மிக நெருக்கமான ( உறவினரான) ஆணுக்கு உரியதாகும். (புஹாரி:6732,6735,முஸ்லிம்)

((பஇன் கானதஸ்னததைனி பலஹுமஸ் சுலுசானி மிம்மா தரக ; பெற்றோர்கள், பிள்ளைகள் இல்லாமல் மரணிக்கும் அவருக்கு இரண்டு சகோதரிகள் இருந்தால் அவ்விருவருக்கும் விட்டுச் செல்வதில் மூன்றில் இரண்டு இருக்கின்றது.))

மரணித்த அவருக்கு இரண்டு அதைவிட அதிகமான சகோதரிகள் இருந்தால் அவர்கள் மூன்றில் இரண்டில் பங்கு பெறுவார்கள்.

இங்கிருந்தே 'இரண்டு பெண் பிள்ளைகளுக்கு மூன்றில் இரண்டு இருக்கிறது ' என்ற சட்டத்தை '4:11 வசனத்தில் இரண்டு பெண்பிள்ளைகளுக்கு மேலிருந்தால்' என்று வரும் வசனத்திற்கு இரண்டும் அடங்கும் என்று சிலர் சட்டம் எடுத்தனர். (இப்னு கஸீர்)

((வஇன் கானூ இஃவதன் ரிஜாலன் வனிசாஅன் பளித்தகரி மிஸ்லு ஹல்லில் உன்சயைய்ன்; அவர்கள் ஆண்கள் பெண்கள் என்ற நிலையில் பல சகோதரர்களாக இருந்தால் இரண்டு பெண்களின் பங்கு போன்றது ஒரு ஆணுக்கு இருக்கின்றது.))

இது எஞ்சியதை எடுக்கும் (அசபத் காரர்) அவர்களுக்குரிய சட்டமாகும், அவர்கள் ஆண்கள் பெண்கள் ஒரேநேரத்தில் இருந்தால் உள்ள சட்டம்.

((யுபையினுல்லாஹு லகும் அன் தலில்லூ; நீங்கள் வழிதவறி விடாமலிருக்கும் பொருட்டு அல்லாஹ் உங்களுக்கு தெளிவு படுத்துகின்றான்.))

சொத்துக்கள் விடயத்தில் மனிதன் தவறிழைத்து விடக்கூடாது என்பதற்காகத் தான் அல்லாஹ் இவ்வளவு தெளிவாக வராசத் சட்டத்தை தெளிவு படுத்தியுள்ளான். (அல்லாஹ்வே மிக தூய்மையானவன்)

((வல்லாஹு பிகுல்லி ஷைஇன் அலீம் ; அல்லாஹ் அனைத்தையும் அறிந்தவனாக இருக்கின்றான்.)) இவ்வளவு தெளிவாக அனந்தர் சொத்தின் சட்டத்தை சொல்லித்தந்த அல்லாஹ் மனிதர்களின் நலவுகளை மிக அறிந்தவன், மட்டுமல்லாமல் இந்த சட்டங்களை சரிவர நிறைவேற்றுவோர் யார் என்பதையும் அவன் நன்கு அறிந்தவனாவான். இந்த உணர்வு அல்லாஹ்வை நம்பும் அனைவருக்கும் நிச்சியம் இந்த சட்டத்தை சரியாக நடைமுறைப்படுத்த உதவும். (**வஆகிரு தஃவானா அனில் ஹம்து லில்லாஹி ரப்பில் ஆலமீன்**)